# ජනාධිපති කාර්යාලය
# சனாதிபதி செயலகம
# Presidential Secretariat



කාර්ය සාධන වාර්තාව
செயலாற்றுகை அறிக்கை
Performance Report

2015


மைத்திரி
ஆட்சி……
நிலையான நாடு



## அதிமேதகு சனாதிபதி அவர்களின் செய்தி

செயலாற்றுகையின் முன்நிபந்தனையானது திட்டமிடலாகும். ஒரு திட்டமின்றி செயலாற்றுகையை எதிர்பார்க்க இயலாது. அது, வெற்றிகரமான வாழ்க்கை விடயத்தைப்போன்று வேலைத்தலங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகிய எந்தத் துறைக்கேனும் ஏற்புடையதாகும். ஒரு நாடு என்ற ரீதியில் எடுத்துக்கொள்ளும்போது திட்டமிடலானது கட்டாயக் காரணியாக அமையுமென்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் ஒரு காலகட்டத்தில் எதுவித திட்டமிடலோ அல்லது வெளிப்படைத் தன்மையோ இல்லாது செயற்பட்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது. அதனாலேயே வீண்விரயம், ஊழல், அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் என்பவற்றோடு நாடு பின்னடைவின் பாதாளத்தைநோக்கியே வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது.

2015 சனவரி எட்டாந் திகதி மக்கள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த நாட்டை நல்வழிநோக்கித் திசைதிருப்புவதற்காக மக்கள் எடுத்த தீர்மானம் வரலாற்றுரீதியானதாகும். மக்களால் எமக்கு ஒப்படைக்கப்பட்ட நாட்டை நல்வழியில் முன்னெடுக்கும் கடினமான முயற்சியிலேயே நாம் இப்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அதன்போது எமக்கு நேரடித் தீர்மானங்களை எடுக்க நேரிடலாம்.

அதன்போது எமக்கு நேரடித் தீர்மானங்களை எடுக்க நேரிடக்கூடும். அரச சேவையில் நிலவும் இழுபறி முறைமையை நீக்கிவிட்டுத் துரிதமான, உற்பத்திப்பெருக்க அத்துடன் சுறுசுறுப்பான முறைகளை அணுக நேரிடலாம். கடந்தகாலத்தில் ஏற்பட்ட தவறுகள் மீண்டும் ஏற்டாதவாறு நடவடிக்கை எடுக்க நேரிடலாம்.

நாட்டின் ஒழுங்குபடுத்தல் பொறிமுறை சனாதிபதி அலுவலகத்தின் செயற்பாடுகளை மையமாகக் கொண்டிருப்பதால் இந்த அலுவலகம் முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக, உற்பத்திப்பெருக்கத்தோடு, அத்துடன் துரிதமான இருபத்திரண்டு மில்லியன் அளவான மக்களின் சேவைக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டும்.

நாம் அனைவரும் அந்தப் பொறுப்பை முழுமையாகப் பூர்த்திசெய்யக் கடப்பாடுடையவர்கள் ஆவோம்.

**அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன**
**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**



## சனாதிபதியின் செயலாளரின் செய்தி

சனாதிபதி அலுவலகத்தின் பணிப்பொறுப்பானது, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்புகளோடு இணையாக மிக விசேடமானதாகும். நேரடியாக சனாதிபதிக்குப் பொறுப்புக் கூறுவதுபோன்று சனாதிபதியின் தூரநோக்கு நாட்டுக்கும் மக்களுக்கும் வழங்குவது எமக்கு ஒப்படைக்கப்படும் பிரதான பணிப்பொறுப்புகளாகும்.

மக்களின் விசேட கவனத்திற்கு இலக்காகும் அரச நிறுவனங்களுள் சனாதிபதி அலுவலகமானது முக்கிய நிறுவனமாகும். அதேபோன்று மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவுள்ள வசதியான அத்துடன் முக்கியமான நிறுவனமாதலால் சனாதிபதி அலுவலகம் எப்பொழுதும் மக்கள் தேவைகளின் முன்னணியில் செயற்பட வேண்டியதுடன் வினைத்திறமையை உயர்ந்த மட்டத்தில் பேணவேண்டியுள்ளது.

மேற்போந்த விடயங்களின்மீது கவனம் செலுத்தும்போது சனாதிபதி அலுவலகத்தின் செயலாற்றுகையை மிக உயர்ந்த மட்டத்தில் பேணமுடிந்தமை எம அனைவரினதும் மகிழ்ச்சிக்குரிய காரணமாகும். சனாதிபதி அவர்களின் நேரடித் தலையிடல் மற்றும் மேற்பார்வையின்கீழ் செயற்படுத்தப்படும் ஐந்து விசேட கருத்திட்டங்களை மிகவெற்றிகரமாக மக்களிடையே எடுத்துச்சென்று மக்கள் நலனோம்புகையை ஏற்படுத்தக் கிடைத்தமை நாம் பெற்ற சிறப்பு வெற்றியாகும். அதனிடையில் இராச தந்திர உறவுகளை விருத்திசெய்யும் பொருட்டு செயற்படுத்தப்படும் விசேட வெளிநாட்டு இராச தந்திர வரவேற்புகள், மற்றும் பேச்சுவார்த்தைகளுக்காக சனாதிபதி அலுவலகம் எப்போதும் தயாராக இருத்தல் முக்கிய கருமமாகக் கருதப்படுகின்றது.

சனாதிபதி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த விசேட பணிப்பொறுப்புகள் காரணமாகவே உயர்மட்ட உத்தியோகத்தர்முதல் குறைந்தமட்ட ஊழியர்வரை நல்ல ஒழுக்கம் மற்றும் அடக்கத்துடன் செயற்படுவது முக்கியமாகும் என்பது வலியுறுத்த வேண்டிய விடயமாகும். அதனை அவ்வாறே பாதுகாத்துக்கொண்டு கடந்த ஆண்டில் காட்டிய கூட்டுமுயற்சி பாராட்டத்தக்கதாகும்.

அதேபோன்று நிதி நிருவாகத்தில் எற்பட்ட ஒழுக்கச் சீர்கேடு தொடர்பில் கடந்தகாலத்தில் ஏற்பட்ட குறைகூறல்களிலிருந்து சனாதிபதி அலுவலகத்தை விடுவிப்பதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் வழிகாட்டலும் பணித்தொகுதியின் மேற்பார்வையும் காரணமானது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் விசேட வாய்ப்புக்கள் பலவற்றை இலக்காகக்கொண்டு புத்தாண்டு பிறக்கிறது. ஆகவே எமது பணிப்பொறுப்பும் அதற்கு இணையாகவும் வினைத்திறமையாதலும் வேண்டும். அதற்காக உங்கள் அனைவருக்கும் சக்தியும் பலமும் கிட்டவேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

**பி.பீ.அபேகோன்**
சனாதிபதியின் செயலாளர்

# பொருளடக்கம்

பக்க இல.


| | | |
|---|---|---|
| **01.** | அறிமுகம் | 1-2 |
| **02.** | செயலாளர் பணியகம | 3-14 |
| **03.** | அந்தரங்கச் செயலாளர் பிரிவு | 15 |
| **04.** | பதவியினர் பிரதானி பிரிவு | 16-22 |
| **05.** | அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பிரிவு | 23-26 |
| **06.** | உள்ளக நிருவாகப் பிரிவு | 27-32 |
| **07.** | மனிதவள அபிவிருத்திப் பிரிவு | 33-36 |
| **08.** | தாபன கூட்டிணைப்புப் பிரிவு | 37-42 |
| **09.** | கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பரிவு | 43-49 |
| **10.** | நிதி முகாமைத்துவப் பிரிவு | 50-52 |
| **11.** | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 53-54 |
| **12.** | சனாதிபதி நிதியப் பிரிவு | 55-57 |
| **13.** | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு | 58-80 |
| **14.** | மக்கள் தொடர்பாடல் பிரிவு | 81-82 |
| **15.** | ஊடகப் பிரிவு | 83-85 |
| **16.** | நல்லிணக்கப் பிரிவு | 86 |
| **17.** | போக்குவரத்துப் பிரிவு | 87-90 |
| **18.** | சட்டப் பிரிவு | 91-94 |
| **19.** | வைத்திய சேவைக் கூறு | 95 |
| **20.** | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 96 |
| **21.** | சனாதிபதி விசாரணை ஆணைக்குழு | 97 |



*சனாதிபதி செயலகம்*
*இலங்கை*

## 01. அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அரசின் தலைவரும் ஆட்சித்துறையினதும் ஆயுதந்தாங்கிய படைகளினதும் படைத் தலைவரும் ஆவார். இலங்கை அரசியலமைப்பின்படி சனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக நிருவாகரீதியிலான அத்துடன் தாபனரீதியிலான சட்டகம் சனாதிபதி அலுவலகத்தினால் தயாரிக்கப்படுகிறது. தற்போதைய சனாதிபதியின் செயலகம் காலிமுகத்திடலில் உள்ள பழைய பாராளுமன்றக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. எமது நாட்டின் அரசியல் முன்னேற்றத்தின் மிக முக்கிய தாபனரீதியான சூழ்நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் கவர்ச்சிகரமான மாளிகையானது அதான்ஸ் நகரத்தில் ”அத்துறொபொலிஸ்” மலை உச்சியில் அமைந்துள்ள கிரேக்க தேவகன்னிகைக்காக அர்ப்பணிக்கப்பட்ட பிரதான புனிதத்தலமான பாத்தினன் தேவாயலத்துக்கு நேரொத்ததாக நிர்மாணிக்க்கப்பட்டுள்ளது. இது ஐ வகையான ஆக்க வடிவங்களில் ஒன்றான “அயோனிக்க” வடிவத்தை அடிப்படையாகக்கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1930 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் திகதி ஆளுநர் ஸ்ரீமத் ஹர்பட் ஸ்டான்லி அவர்களினால் இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் சட்டவாக்கச் சீர்திருத்தத்துடன் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இக்கட்டிடம் (1931-1947) வரை செனட் பிரதிநிதிகள் சபையெனவும், (1947-1972) வரை பிரதிநிதிகள் சபை எனவும், (1972-1978) வரை தேசிய அரச பேரவை எனவும், (1978-1982) வரை பாராளுமன்றம் எனவும் அழைக்கப்பட்டது. ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்திற்கு பாராளுமன்றம் கொண்டுசெல்லப்பட்டதற்குப் பின்னர் இந்த வரலாற்றுரீதியிலான மாளிகை 1983 செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதியிலிருந்து சனாதிபதியின் செயலகமாக அழைக்கப்படுகின்றது. இந்த மாளிகையின் நிர்மாணக் கருத்திட்டத்துக்காக 1912 ஆம் ஆண்டில் ஆளுநரான திருவாளர் ஹென்றி மெக்கலம் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. தரைப்படை விடுதி மற்றும் பேர வாவிக்கிடையில் உள்ள காலிமுகத்திடலின் வடபக்க முடிவில் அமைந்துள்ள சதுப்புநிலத்தை நிரப்பி காலிமுகத்திடல் வீதியின் மேற்கு திசைநோக்கி மேலாண்மை வடிவில் மாளிகை நிர்மாணிக்கப்பட்டது.

சனாதிபதி அலுவலகத்தின் நிர்வாக அலுவல்கள் தொடர்பான தலைவராவது, சிவில் சேவையின் சேவைமுதுமுறையுடைய உத்தியோகத்தரும், இலங்கை நிருவாக சேவையின் தலைவராக உத்தியோகபூர்வ அதிகாரத்தின்மூலம் நியமிக்கப்படுபவருமான சனாதிபதியின் செயலாளர் ஆவார்.அரசின் கொள்கைகளை செயற்படுத்துவதற்காக சகல பிரிவுகளுடனும் கூட்டிணைப்பு மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்ளல், விசேட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச்செயற்படுத்துதல் பற்றிய முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடராய்வு, அனுபவரீதியாக கண்டறியக்கூடிய பொதுமக்களின் விருப்புக்கள் மற்றும் மனக்குறைகளை நடவடிக்கை எடுத்தலும் வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தலும் சனாதிபதி அலுவலகத்தின் பிரதம பணிகளாகும்.

**சனாதிபதி அலுவலகம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது**

- செயலாளர் பணியகம்
- அந்தரங்கச் செயலாளர் பிரிவு
- பதவியினர் பிரதானிப் பிரிவு
- அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பரிவு
- உள்ளக நிர்வாகப் பிரிவு
- மனிதவள அபிவிருத்திப் பிரிவு
- நிறுவனக் கூட்டிணைப்புப் பிரிவு
- கொள்கை கூட்டிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு
- சனாதிபதி நிதியப் பிரிவு
- அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு
- பொதுமக்கள் தொடர்புப் பிரிவு
- ஊடகப் பிரிவு
- நல்லிணக்க அலுவலகம்
- போக்குவரத்துப் பிரிவு
- தகவல் தொழில்நுட்பக் கூறு
- சட்டத்துறைப் பிரிவு
- மருத்துவச் சேவைகள் பிரிவு
- சனாதிபதி புலனாய்வுக் கூறு
- சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

## 02. செயலாளர் பணியகம்

***அறிமுகம்***

அதிமேதகு சனாதிபதி அவர்கள்சார்பில் சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் மேற்கொள்ளப்படும் பணிகளை மிக இலகுபடுத்தலும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இப் பிரிவால் செய்யப்படுகின்றது. அதற்கமைய இப்பிரிவின்மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் பின்வருமாறு:

***பொது நோக்கங்கள்/ செயற்பாடுகள்***

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கைக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்
- வெளிநாட்டு அரச தலைவர்கள் வருகைதரும்போது அதிமேதகு சனாதிபதி அவர்களின்/ சனாதிபதியின் செயலாளர் அவர்களின் ஆலோசனைகளுக்கமைவாக விழாக்களை ஏற்பாடு செய்தலும் கூட்டிணைப்புப் பணிகளைப் புரிதலும்
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் மேற்கொள்ளபபடும் கடிதங்கள் தொடர்பான பணிகள்
- சனாதிபதியின் செயலாளர் பணியகத்தினால் கூட்டப்படும் கூட்டங்களுக்கு அழைப்பிதழ்களைத் தயாரித்தல், கூட்டங்கள் நடாத்துவதற்கான வசதிகளை விசாரித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல், கூட்டக்குறிப்புகளைப் பேணல், தொடராய்வு என்பவற்றுடன் சகல ஏற்பாட்டுப் பணிகளுக்கும் வசதியளித்தல்
- அமைச்சுச் செயலாளர்களின் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் / சனாதிபதியின் செயலாளர் அவர்களின் ஆலோசனைகளின்படி சுற்றறிக்கைகளை வெளியிடுதல்
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் நியமனங்கள் தொடர்பான பணிகள்
- சர்வகட்சி மாநாடு மற்றும் சர்வமதங்களின் மாநாட்டுக்குரிய ஏற்பாட்டுப் பணிகளும் ஒருங்கிணைப்பும்
- அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் சொத்துக்கள், பொறுப்புகள், பிரகடனங்களை சமர்ப்பிக்கவேண்டிய நபர்களிடமிருந்து குறித்த சொத்துக்கள், பொறுப்புக்கள், பிரகடனங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பணிகள்
- சனாதிபதி சுற்றாடல் முன்னோடி தங்கப்பதக்கம் பெறுநர்களின் நேர்முகப் பரீட்சைகளில் நடுவர் சபை தலைவர் பதவியில் செயலாற்றுதல்

- அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் சனாதிபதியின் செயலாளரிடம் முன்வைக்கப்படும் பலவித முறைப்பாடுகள்,கோரிக்கைகள் முதலியன தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களின்/சனாதிபதியின் செயலாளரின் ஆலோசனைகளின்படி செயலாற்றுதல்

- சனாதிபதி அலுவலகம் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான பணிகள்

- அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் சனாதிபதி பணியகத்தினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் அதிவிசேட செயற்பாடுகள் தொடர்பாக மாதாந்த அறிக்கையொன்றைத் தயாரித்தல்

- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் ஆலோசனைகளின்படி சகல அமைச்சுக்களினதும் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

- சனாதிபதி அலுவலகத்தின் சுற்றறிக்கைகள்/உள்ளகக் கடிதங்கள், அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகள்/நிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் வேறு அதிவிசேட சுற்றறிக்கைகள்/கடிதங்கள் தொடர்பான சேவைகளை இற்றைப்படுத்திப் பேணுதல்

## *2015 ஆண்டில் அடைந்துகொண்டவை*

- **அதிவணக்கத்துக்குரிய பிரான்சிஸ் பாப்பரசரின் இலங்கை விஜயம்**



அதிவணக்கத்துக்குரிய பிரான்சிஸ் பாப்பரசரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு 2015 சனவரி மாதம் 13 ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற வைபவம் மற்றும் சனாதிபதி மாளிகையில் அவருக்கும் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் இடையே நடந்த இருதரப்புரீதியிலான கலந்துரையாடல் தொடர்பான கூட்டிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்**

2015 பெப்புரவரி மாதம் 13 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் பொலிஸ் திணைக்களத்தின் சிரேட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலொன்று நடாத்தபட்டதுடன் மக்கள் ஒழுங்கு, இடர்முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சர் அவர்கள், அவ்வமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் திணைக்களத்தின் சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 37 பேரும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.பொலிஸ் திணைக்களத்துக்காக தகுந்த பதவிஉயர்வுத் திறமுறையொன்றினைத் தயாரிக்கும் தேவை, பொலிஸாரால் ஆற்றப்படும் சேவையை விதிமுறைப்படுத்தல், இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை விதிமுறைப்படுத்தல், அபராதப் பணங்களைச் செலுத்துவதற்கு குறுகிய முறையொன்றைப் பயன்படுத்துதல், மற்றும் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை ஸ்தாபித்தல் உட்பட பல விடயங்கள்பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

- **வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கிய நாடுகள் மற்றும் அதிவிசேடமான மற்றைய சர்வதேச அமைப்புக்களின் முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்**

2015 பெப்புரவரி மாதம் 13 ஆந் திகதி வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கியநாடுகள் மற்றும் அதற்கு அதிவிசேடமான மற்றைய சர்வதேச அமைப்புகளின் முகவர்கள் அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் வெளிநாட்டுத் தூதுவர்கள் 45 பேரும், மற்றைய சர்வதேச அமைப்புகளின் முகவர்கள் 24 பேரும், பங்குபற்றியதுடன் குறித்த கலந்துரையாடலின் கூட்டிணைப்பும் ஏற்பாடும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் இந்திய உத்தியோகபூர்வ விஜயம்**



2015 பெப்புரவரி மாதம் 15 ஆந் திகதிமுதல் 18 ஆந் திகதிவரை அதிமேதகு சனாதபதி அவர்களினால்மேற்கொள்ளப்பட்ட இந்திய உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

## ➢ அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் இலங்கை நிருவாக சேவை சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்

2015 பெப்புரவரி மாதம்6 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இலங்கை நிருவாக சேவை சங்க உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் ஏற்பாட்டுப் பணிகள் மற்றும் கூட்டிணைப்புப் பணிகள் இப்பிரிவினால மேற்கொள்ளப்பட்டதுடன் இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கை நிருவாக சேவையின் கடமைப்பொறுப்பு, இலங்கை நிருவாக சேவையின் வெறறிடங்களை நிரப்புதல், இலங்கை நிருவாக சேவையின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திசெய்தல், இலங்கை நிருவாக சேவைக்காக தொழில்சார் நிறுவனமொன்றதை் தாபித்தல், விதிமுறையற்றதாக உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல், இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களை வெளிநாட்டு தூதுவர் குழு வெற்றிடங்களுக்காக நியமித்தல், பெறுகை நடவடிக்கைகளை விதிமுறைப்படுத்துதல், மற்றும் காணி விடயம் சமம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்தல் முதலிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## ➢ இந்தியப் பிரதமர் அவர்களின் இலங்கை உத்தியோகபூர்வ விஜயம்



இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த இந்தியப் பிரதமர் அவர்கள் சனாதிபதி அலுவலகத்துக்கு வருகைதருவதை முன்னிட்டு 2015 மார்ச்சு மாதம் 13 ஆந் திகதி இடம்பெற்ற வைபவத்தின் வரவேற்புப் பணிகள், இருகட்சிசார் கலந்துரையாடல், ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடல் மற்றும் இந்திய பிரதமர் அவர்கள் சார்பில் நடத்தப்பட்ட விசேட இராப்போசன விருந்துபசாரத்தின் பணிகள் மற்றும் கூட்டிணைப்புப் பணிகள், செயலாளர் பணியகத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- **கட்டார் இராச்சியத்தின் தலைவர் ஷெய்க் தமீம் பீன் ஹமாத் அல் தானீ அவர்களின் இலங்கை உத்தியோகபூர்வ விஜயம்**



2015 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதி இலங்கைக்கு வருகைதந்த கட்டார் இராச்சியத்தின் தலைவர்ஷெய்க் தமீம் பீன் ஹமாத் அல் தானீ அவர்களின் இராஜாங்க விஜயம் சார்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற வரவேற்பு விழா, இருகட்சி சார்பான கலந்துரையாடல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடல் ஆகிய விடயங்கள் இந்தப் பிரிவின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் சீனா உத்தியோகபூர்வ விடயம்**

2015 மார்ச்சு மாதம் 25 ஆந் திகதிமுதல் 29 ஆம் திகதிவரை அதிமேதகு சனாதிபதி அவர்கள் மேற்கொண்ட சீனா உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.



## ➢ அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாகிஸ்தான் உத்தியோகபூர்வ விஜயம்



அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2015 ஏப்பிரல் மாதம் 05 ஆந்திகதிமுதல் 07 ஆந் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட பாகிஸ்தான் உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து இந்தப்பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## ➢ பூட்டான் பிரதமர் அவர்களின் இலங்கை உத்தியோகபூர்வ விஜயம்

2015 ஏப்பிரல் மாதம் 09 ஆந் திகதிமுதல் 12 ஆந் திகதிவரை இலங்கைக்கு நான்குநாள் விஜயத்தை மேற்கொண்ட பூட்டான் பிரதமர் அவர்கள் ஏப்பிரல் மாதம் 09 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்துக்கு வருகைதந்ததைமுன்னிட்டு இடம்பெற்ற உத்தியோகபூர்வ வரவேற்பு விழா, இருகட்சிசார்பான கலந்துரையாடல்,மற்றும் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடல் முதலியன இந்தப்பிரிவினால் கூட்டிணைக்கப்பட்டது.




## ➢ அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் இலங்கை வர்த்தக சபை உத்தியோகத்தர்களுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்

அதிமேதகு சானாதிபதி அவர்களுக்கும் இலங்கை வர்த்தகச் சபையின் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் 2015 யூன் மாதம் 23 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் கூட்டிணைப்புப் பணிகளும் ஏற்பாட்டுப் பணிகளும் செயலாளர் பணியகத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் மாலைதீவு உத்தியோகபூர்வ விஜயம்**



மாலைதீவு இராச்சியத்தின் 50 ஆவது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு 2015 யூலை மாதம் 26 ஆந் திகதிமுதல் 27 ஆந் திகதிவரை அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இருநாள் விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.



- **புதிய அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் மேற்கொண்ட விழா**

2015 செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி இடம்பெற்ற புதிய அமைச்சர்கள் சபையின் சத்தியப் பிரமாண விழாவின் ஏற்பாட்டுப் பணிகளும் கூட்டிணைப்புப் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- **இராஜாங்க அமைச்சர்கள்மற்றும் பிரதி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் மேற்கொண்ட விழா**

2015 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி இடம்பெற்ற இராஜாங்க அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் சத்தியப்பிரமாணம் செய்யும் விழாவின் ஏற்பாட்டுப் பணிகளும் கூட்டிணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டமை.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் நியூயோர்க விஜயம்**

2015 செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிமுதல் ஒக்தோபர் மாதம் 02 ஆந் திகதிவரை நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற 70 ஆவது ஐக்கியநாடுகளின் மகா சம்மேளனத்தில் கலந்துகொண்ட அதிமேதகு சனாதிபதி அவர்களின் உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.



➢ **அதிமேதகு சனாதிபதி அவர்களின் தாய்லாந்து உத்தியோகபூர்வ விஜயம்**



அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2015 நவம்பர் மாதம் 01 ஆந் திகதிமுதல் 04 ஆந் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட தாய்லாந்து விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

➢ **வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்துதல்பற்றிய கலந்துரையாடல்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்துதல் பணிகளைத் துரிதப்படுத்தல் தொடர்பாக 2015 நவம்பர் மாதம் 11 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் அனைத்துக் கூட்டிணைப்புப் பணிகளும் செயலாளர் பணியகத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

➢ **அதிமேதகு சனாதிபதி அர்களின் மோல்ரா விஜயம்**




2015 நவம்பர் மாதம் 26 ஆந் திகதிமுதல் 29 ஆந் திகதிவரை அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மோல்ரா இராச்சிய விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து கூட்டிணைப்பானது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படடது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரான்ஸ் விஜயம்**




அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2015 நவம்பர் மாதம் 29 ஆந் திகதிமுதல் டிசம்பர் மாதம் 01 ஆந் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட பிரான்ஸ் விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டமை

- **அதிமேதகு சனாதிபதி அவர்களின் வத்திக்கானுக்கான விஜயம்**



2015 திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிமுதல் 15 ஆந் திகதிவரை வத்திக்கான் இராச்சியத்துக்கு விஜயத்தை மேற்கொண்ட அதிமேதகு சனாதிபதி அவர்களின் விஜயத்தின் கூட்டிணைப்பு பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

- **நத்தார் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற விசேட இராப்போசன விருந்துபசாரம்**



2015 ஆம் ஆண்டில் நத்தார் வைபவத்தை முன்னிட்டு டிசம்பர் மாதம் 22 ஆந் திகதி சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட விசேட நத்தார் இராப்போசன விருந்துபசாரத்தின் கூட்டிணைப்பு மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் இப்பிரிவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

### ➢ சர்வகட்சி மாநாட்டுக் கூட்டங்கள்



இலங்கையில் நல்லிணக்கம், வகைகூறல் மற்றும் மனிதஉரிமைகளை மேம்படுத்துவதற்காக 2015 ஒக்தோபர் மாதம் 23 ஆந் திகதியும் நவம்பர் மாதம் 17 ஆந் திகதியும் நடாத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டுக் கூட்டங்களின் கூட்டிணைப்பு மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. 2015 நவம்பர் மாதம் 17 ஆந் திகதி இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கலந்துரையாடலின்போது கட்சிப் பிரதிநிதிகள் அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒவ்வொரு அரசியல் கட்சிகளினாலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை ஆதாரமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட சுருக்க அறிக்கையொன்று மும்மொழிகளில் தொடர்புடைய தரப்புகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### ➢ அமைச்சுச் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2015.06.23 ஆந் திகதி அமைச்சுச் செயலாளர்களுடன் கூட்டமொன்றும் சனாதிபதி செயலாளரின் தலைமையில் 2015.01.24, 2015.05.12 மற்றும் 2015.11.02 ஆகிய திகதிகளில் 3 கூட்டங்களும் நடத்தப்பட்டதுடன் அக்கூட்டங்களுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### ➢ சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்

பின்வரும் உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கல் இப்பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- நீதிபதி திரு.பீ.எல்.கே. விமலச்சந்திர - ஆணையாளர், இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு
- கௌரவ பீ.பி. அலுவிகார அவர்கள் - உயர்நீதிமன்ற நீதிபதி
- திரு.ஆர்.எம்.விஜயரத்ன - சிரேட்ட விரிவுரையாளர், இலங்கை மன்றம்
- திரு.டி.ஜ த எஸ். பாலபட்டபெந்திகே - தலைவர், இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு
- திரு.சி.என்.பலிகவடன - பிரதிப் பணிப்பாளர், இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

### ➢ மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்பற்றிய அறிக்கை

அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் சனாதிபதி செயலாளர் அவர்களின் தலைமையில் சனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், கூட்டங்கள், விழாக்களுக்குரியதாக சுருக்க தகவல்களை 2015 டிசம்பர் மாதம்வரை மாதாந்தம் தயாரித்து சனாதிபதியின் செயலாளரிடம் முன்னிலைப்படுத்தல்.

### ➢ சுற்றறிக்கைகளை வெளியிடுதல்

இந்தப் பிரிவினால் பின்வரும் இலக்கங்களுடைய சுற்றறிக்கைள் வெளியிடப்படுகின்றன:

| தொ.இல | சுற்றறிக்கையின் பெயர் | சுற்றறிக்கை இல | திகதி |
|---|---|---|---|
| 01. | இலஞ்ச ஊழல் மற்றும் அரசவளங்களை அபகரித்தல்பற்றிய ஆவணங்கள் | SP/SB/01/15 | 2015.02.02 |
| 02. | கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் | SP/SB/02/15 | 2015.02.05 |
| 03. | கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை வழங்குதல் (மேற்போந்த சுற்றறிக்கையைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ளது) | SP/SB/02/15 | 2015.02.09 |
| 04. | கடந்த அரசாங்கத்தின் சிரேட்ட அமைச்சர்களுக்காக உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை வழங்குதல் | SP/SB/03/15 | 2015.02.13 |
| 05. | மாகாணசபைகளது உத்தயோகததர்களை நிரல் அமைச்சக்களின் பணிகளுக்காகப பங்களிக்கச் செய்தல் | SP/SB/04/15 | 2015.03.06 |
| 06. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 50(ஆ) பிரிவின்மீது உங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன். | SB/02/ චක්‍රලේඛ | 2015.06.29 |
| 07. | அரசதுறையின் விழாக்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் | SP/SB/07/15 | 2015.09.25 |
| 08. | அரச அலுவலகங்களின் இணையத்தளங்களை இற்றைப்படுத்தல் | SP/SB/08/15 | 2015.12.15 |
| 09. | விளையாட்டுக்கள் மற்றும் உடல் ஆரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரம் மற்றும் விசேட தினத்தை நடைமுறைப்படுத்துதல் - 2016 சனவரி 25-30 | SP/SB/09/15 | 2015.12.31 |
| 10. | கடிதங்கள், சுற்றறிக்கைகள், கொள்கைரீதியிலான தீர்மானங்கள், கூட்ட அறிக்கைகள் மற்றும் கலந்துரையாடல், குறிப்புகளின் பிரதிகளை முன்வைத்தல். | SB/2/1/A/10 | 2015.05.20 |

- ***சனாதிபதி சுற்றாடல் முன்னோடி தங்கப்பதக்கம் பெறுநர்களின் நேர்முகப் பரீட்சைகளில் நடுவர் குழுப் பணிகள்***

2015 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் நடத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடி பதக்கமளிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகளின் நடுவர் குழு பணிகளில்ஈடுபட்டது.

| திகதி | இடம் |
|---|---|
| 2015 மே மாதம்11 மற்றும் 12 | களுத்தறை மாவட்டச் செயலகம் |
| 2015 மே மாதம்18 | அல்-அலீஷா தேசியப் பாடசாலை, அம்பாறை |
| 2015 மே மாதம்21 மற்றும் 22 | பொல்கொல்ல மத்திய சூழல் அதிகாரசபை மாகாண அலுவலகம் |
| 2015 யூலை 06 மற்றும் 07 | பிபிலை மெதகம தேசியப் பாடசாலை |
| 2015 யூலை30 | விசாகா வித்தியாலயம், பம்பலப்பிட்டி |
| 2015 செத்தெம்பர்28 மற்றும் 29 | அநுராதபுரம், பதவிய,ஈயாய 05 ஆவது மைல்கல் மத்திய மகா வித்தியாலயம் |
| 2015 ஒக்தோபர் 01 மற்றும் 02 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மத்திய மாகாண சபை |

- **மாவட்ட மற்றும் பிரதேசக் கூட்டிணைப்பு குழுக்களின் இணைத்தலைவர்களை நியமித்தல்**

01. 25 மாவட்டங்களுக்காக மாவட்டக் கூட்டிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் 67 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

02. பிரதேசக் ஒருங்கிணைப்புக் குழுக்களுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சார்பில் இணைத் தலைவர்கள் 53 பேரையும், களுத்துறை மாவட்டத்தில் பேருவளை பிரதேசச் செயலகப் பிரிவுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இணைத் தலைவர் ஒருவரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## 03. அந்தரங்கச் செயலாளர் பிரிவு

### அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் / அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகள் / கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக உச்சக்கட்ட வினைத்திறமையுடன் செயற்படுதல்

### பொது நோக்கங்கள் / செயற்பாடுகள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் / அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகள் / கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக உச்சக்கட்ட வினைத்திறமையுடன் செயற்படுதல்

- அதிமேதகு சனாதிபதி அவர்கள் சம்பந்தப்படும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்புகள்குறித்து நாள்பதிவேட்டைத் தயாரித்தல். அதற்கமைய நாளாந்த நிகழ்சித்திட்டங்களை நிரைப்படுத்தல், கூட்டிணைத்தல் மற்றும் தொடர்புடைய பிரிவுகளையும் உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்தல்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் கட்டளைக்கமைய அவருடைய கையொப்பத்துக்காகக் கடிதங்களை ஒழுங்குபடுத்தல்.

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டிய கடிதங்கள்/அறிக்கைகள், விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் போன்றவற்றை குறித்துவைத்து அவருக்குச் சமர்ப்பித்தலும் அதற்காக வழங்கப்படும் கட்டளைகளுக்கமைய நடவடிக்கை எடுத்தலும்.

- மக்கள் பிரதிநிதிகளாலும் பொதுமக்களினாலும் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கை எடுத்தல்

- கிடைக்கின்ற கடிதங்கள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்துதல் / கடிதக்கோவைகளைத் தயாரித்தல் மற்றும் பேணுதல்

## 04. பதவியினர் பிரதானி பிரிவு

***பணி***

**இருக்கின்ற பௌதீக, நிதி மற்றும் மனிதவளங்களை சிறந்தமட்டத்தில் பயன்படுத்தி அரச கொள்கைகளின் நோக்கங்களை எதிர்பார்க்கப்படும் பண்புத்தரத்துடன் நிறைவேற்றிக்கொள்ளல்**

### அறிமுகம்

சனாதிபதி பணித்தொகுதியை முகாமைசெய்தல், அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான கூட்டிணைப்பு, கொழும்பு மற்றும் வெளிமாகாணங்களில் விழாக்கள் மற்றும் கூட்டங்களைக் கூட்டிணைத்தல், அதிமேதகு சனாதபதி அவர்களுக்குக் கிடைக்கின்ற கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகளை அவரது ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தல் முதலியன சனாதிபதி பதவியினர் பிரதானி அலுவலகத்தின் முக்கிய பொறுப்பாகும்.

### பொது நோக்கங்கள் / செயற்பாடுகள்

- சனாதிபதி பணித்தொகுதியை விதிமுறையாக முகாமைசெய்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் கொழும்பு மற்றும் வெளிமாகாணங்களில் இடம்பெறும் கூட்டங்களையும், விழாக்களையும் கூட்டிணைப்புச் செய்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை பயன்மிக்கதாக நடாத்துவதை உறுதிப்படுத்துவதற்கான கூட்டிணைப்பு
- அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கும் கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்
- “பொலன்நறுவையை எழுச்சிபெறச் செய்வோம்” மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுற்றாடல், வலுசக்தித் துறைகளின் கருத்திட்டக் கூட்டிணைப்பு

## 2015 ஆம் ஆண்டின் அடைவுகள்

### I. சனாதிபதியின் பணித்தொகுதியை விதிமுறையாக முகாமைசெய்தல்

சனாதிபதி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல பணித்தொகுதிகளுக்காக விடய ஆய்வு அறிவு, அலுவலக முறைகள், ஒழுக்கம் மற்றும் உளப்பாங்கு அபிவிருத்திக்காக செயலமர்வுகளை நடாத்துதலும், தொடராய்வு செய்தலும்

### II. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருத்தல்

அலுவலகம், உத்தியோகபூர்வ விடுதி மற்றும் வெளிக்கள கடமைகளின் போது பாதுகாப்புப் பிரதானிகளுடன் கலந்துரையாடி கூட்டிணைப்பு வேலைத்திட்டமொன்றை தயாரித்தல். அதிமேதகு சனாதிபதி அவர்களதும் அலுவலகத்தினதும் தகவல்கள் தேவையற்ற தரப்புகளுக்கு கிடைப்பதை தவிர்ப்பதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை அலுவலகத்திற்குள் கொண்டு வருவதைக் கட்டுப்படுத்தல், அலுவலகத்திற்கு வருகை தரும் அதிதிகள் உள்வருவதையும் வெளிச்செல்வதையும் கண்காணிக்கும் முறையொன்றை ஒழுங்கு செய்தல்.

### III.அதிமேதகு சனாதிபதி அவர்கள் கொழும்பிலும் பிற மாகாணங்களிலும் கலந்துகொள்ளும்கூட்டங்கள் மற்றும் விழாக்களை கூட்டிணைத்தல்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் கொழும்பிலும் பிற மாகாணங்களிலும் கலந்துகொள்ளும் கூட்டங்களின் தயார் நிலை, அதில் கலந்துகொள்வது பொருத்தமாகுமா, என்பதுடன் அந்தக் கூட்டங்களில் உரை நிகழ்த்துவது பொருத்தமாகுமா என்பது பற்றியும் அழைக்கப்பட்டுள்ள மற்றும் கலந்து கொள்ளல் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிதிகள் பற்றிய தகவல்கள், கூட்டத்தின் நோக்கம், கூட்டம் நடக்கும் இடம் அல்லது விழா நடக்கும் இடத்திற்குச் செல்லும் பாதைகள் பற்றிய விபரம், ஊடகப் பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பதைப்பற்றி முழுமையான விழிப்புணர்வைப் பெற்றுக் கொண்டு அதுபற்றி கௌரவ சனாதிபதி அவர்களுக்கு தெரியப்படுத்தல்.

இத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சனாதிபதியின் கூட்டிணைப்புச் செயலாளர்களுக்கு மாவட்டங்களின் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர்களிடமிருந்தும் சனாதிபதி பாதுகாப்பு பிரிவினர்களிடமிருந்தும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும், பெற்றுக் கொண்ட தகவல்களை மாவட்டச் செயலாளர்களைக் கொண்டு உறுதி செய்வதற்குமான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தல்.

**IV அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பயன்மிக்கதாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தல்**

அதிமேதகு சனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் சனாதிபதி அலுவலகக் கூட்டங்களின் நோக்கங்கள், முன்னிலைப்படுத்தப்படக் கூடிய பிரச்சினைகள், கோரிக்கைகள், கலந்துகொள்ளும் தரப்புகள், கூட்ட நோக்கத்தின்படி நேரடியாகத் தொடர்பு கொள்ளும் நிறுவனங்கள் பற்றி பூரண விழிப்புணர்வுடன் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு தெரியப்படுத்தல்.

அதிமேதகு சனாதிபதி அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுன் நிகழ்ச்சிநிரல் கலந்துகொள்பவர்கள் பற்றிய தகவல்கள், கூட்டத்தின் நோக்கத்திற்குரிய பின்னணி தகவல்களைக் கொண்ட கோவை மற்றும் குறிப்பு, குறித்துரைக்கும் ஆவணங்கள் மேசையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளலும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு ஊடகப் பணிகளை உறுதிப்படுத்தலும்.

**V. அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற தனிப்பட்ட கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாக பதிலளித்தல்**

அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற மக்கள் கோரிக்கைகளை இனமறிந்து வகுப்பீடு செய்து தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்பி வைத்தல். அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை தொடராய்வு செய்தல், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உள்ள தடைகளை இனம் கண்டு அவற்றை நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொடராய்வு செய்தல் பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தல்.

**VI. "பொலன்நறுவையை எழுச்சிபெறச் செய்வோம்" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுற்றாடல், வலுசக்தித் துறைகளின் கருத்திட்டக் கூட்டிணைப்பு**

"பொலன்நறுவையை எழுச்சிபெறச் செய்வோம்" மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் (சாராம்சம்)

| ய | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாடசாலைகள் சார்ந்த அபிவிருத்தி பணிகள் | 28 |
| பாடசாலைகளுக்கான துப்பரவேற்பாட்டு வசதிகள் | 86 |
| பாடசாலைகளுக்கு மேசை, கதிரை சோடிகளை வழங்குதல் | 48,500 |
| பிரிவெனாக்களை அபிவிருத்தி செய்தல் | 02 |
| மருத்துவசாலைகள் சார்ந்த அபிவிருத்தி பணிகள் | 02 |
| வனசீவராசிகள் பாதுகாப்பு | 02 |
| வனப்பாதுகாப்பு | 01 |
| கமநலச்சேவைகள் | 12 |
| மகாவலி பீ வலயத்தின் பாதைகள் மற்றும் கால்வாய் அபிவிருத்தி | 08 |
| பொதுவசதிகள் | 11 |

**“பொலன்நறுவையை எழுச்சிபெறச் செய்வோம்” மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்**

## 1. பாடசாலைகளைச் சார்ந்த அபிவிருத்தி பணிகள்

1.1 கதுருவெல முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் 3 மாடி வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்.
1.2 விலையாய மத்திய மகாவித்தியாலயத்தின் 3 மாடி வகுப்பறை கட்டிடத் தொகுதியனை நிர்மாணித்தல்.
1.3 மன்னாம்பிட்டி தமிழ் மகாவித்தியாலயத்தின் 2 மாடி வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்
1.4 வெலிகந்த மகாவித்தியாலயத்தின் 2 மாடி வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்.
1.5 மெதிரிகிரிய தேசிய பாடசாலையின் 3 மாடி கட்டிடத்தை நிர்மாணித்தல்.
1.6 விஜித்த மத்திய மகாவித்தியாலயத்தின் 2 மாடி வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்.
1.7 மின்னேரிய தேசிய பாடசாலையின் மாணவர்கள் 800 பேருக்காக கேட்போர் கூடத்தை நிர்மாணித்தல்.
1.8 மஹசென் மத்திய மகாவித்தியாலயத்தின் தொழில்நுட்ப கூறுடன் 3 மாடி வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்.
1.9 அத்துமல்பிட்டிய ஆரம்ப வித்தியாலயத்தில் தற்போது முதலாம் மாடி மற்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடத்தின் 2 ஆம் மாடியை நிர்மாணித்தல்.





1.10 லங்காபுர ஜயந்தி கனிஷ்ட வித்தியாலயத்தின் வகுப்பறையை நிர்மாணித்தல்
1.11 சுங்காவில முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்
1.12 சுகலாதேவி ஆரம்ப பாடசாலையின் வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்
1.13 சிறிபுர மத்திய மகாவித்தியாலயத்தின் 2 மாடி வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்
1.14 சிறிபுர ஆரம்ப வித்தியாலயத்தின் மலசலகூட முறைமையை நிர்மாணித்தல்
1.15 நிக்கவத்தலந்த மகாவித்தியாலயத்திற்கு முறைசார் நீர்வழங்கல் முறைமையொன்றை வழங்குதல்
1.16 திவுலன்கடவல மகாவித்தியாலயத்தின் வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்
1.17 சூரியகம ஆரம்ப வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணித்தல்



1.18 கல்லோயா கனிஷ்ட வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி மற்றும் ஆசிரியர் விடுதி மலசலகூடங்கள் இரண்டினை நிர்மாணித்தல்

1.19ஹிங்குரங்கொடை ஆரம்பநிலை பாடசாலையின் வகுப்பறை கட்டிடத்தினை நிர்மாணித்தல்



1.20 அத்தரகல்லேவ மகாவித்தியாலயத்தின் மாணவர் மலசலகூடத் தொகுதியினை நிர்மாணித்தல்

1.21 அத்தரகல்லேவ மகாவித்தியாலயத்தின் குடிநீருக்காக கிணறு மற்றும் குழாய் வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல்

1.22 நாமல்வெவ ஆரம்பப் பாடசாலை வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.23 பக்கமூன மகாசென் மகாவித்தியாலய வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.24 விலயாய ஆரம்பப் பாடசாலையின் இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.25 அல்இக்றா ஆரம்ப பாடசாலையின் இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.26 கிரிமட்டிய கனிஷ்ட வித்தியாலயத்தின் இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.27 இறஹந்த கெட்டுவெவ வித்தியாலயத்தின் இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

1.28 மடுதமன ஆரம்பப் பாடசாலையின் இருமாடி வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

## 2. சமயத்துறை அபிவிருத்தி

2.1 திம்புலாகல காசியப்ப தபோவனத்தின் இருமாடிதர்ம மண்டபத்தினை நிர்மாணித்தல்

2.2 பெந்திவெவ மஹிந்தாராம விஹாரையின் பிக்குமார் விடுதியினை திருத்தம் செய்தல்

## 3. சுகாதாரத்துறை அபிவிருத்தி

3.1 மெதிரிகிரிய வைத்தியசாலை தாதியர் விடுதியினை நிர்மாணித்தல்

**3.2** மன்னம்பிட்டிய பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சை, அவசர சிகிச்சைப் பிரிவு, கிளினிக் மற்றும் நிர்வாக கட்டிடத்தினை அமைத்தல்.

## 4. வனசீவராசிகள் பாதுகாப்பு

4.1 சிங்கபுர 286 வெலிகந்த திருகோணமடு காட்டு நுழைவாயில்களின் இரு பக்கமாக 46 கிலோ மீற்றர் மின்சார வேலியினை அமைத்தல்.

4.2 நுவரகல களுக்கலே மின்சார வேலியினை அமைத்தல்.

## 5. வனப் பாதுகாப்பு

5.1 பட்டபிலிகந்த களப் பயிற்சி நிலையத்தினைத் திருத்தம் செய்தல்

## 6. கமநல சேவைகள் - வயல் கால்வாய்களை மறுசீரமைத்தல்

6.1 இலுக்பிட்டிய அணையும் கால்வாயும்
6.2 பாலு குளப் படுக்கைக் கால்வாய்
6.3 கடவெல குளப் படுக்கைக் கால்வாய்
6.4 கட்டுகெலியாவ சமகி வாய்க்கால் வழி
6.5 60 ஏக்கர் அணை மற்றும்கால்வாய்
6.6 புதூர் அணை மற்றும்கால்வாய்
6.7 கிரிமட்டிபிட்ட குளம் மற்றும் கால்வாய்
6.8 கணங்கொல்ல அணை மற்றும் கால்வாய்
6.9 ஜனசவி அணையும் கால்வாயும்
6.10 பெரகும் கிராம கால்வாய் வழி
6.11 கட்டுகெலியாவ கிராம மத்தியிலான கால்வாய் வழி
6.12 திகன்னாவ குளம் மற்றும் கால்வாய் வழி

## 7. மகாவலி பீ வலய வீதி மற்றும் கால்வாயை அபிவிருத்தி செய்தல்

7.1 பெலேட்டியாவ மற்றும் அல்லேவெவ பிரிவுகளில் உள்ள கால்வாய் தொகுதிகளுக்கான பாதைத் தொகுதிகளைப் புனரமைத்தல்
7.2 திம்புலாகல பிரிவில் உள்ள கால்வாய் தொகுதிகளுக்குரிய வீதிகளைப் புனரமைத்தல்
7.3 பிம்புறத்தாவ பிரிவில் உள்ள கால்வாய் தொகுதிகளுக்குரிய வீதிகளைப் புனரமைத்தல்
7.4 அருணபுர பிரிவில் உள்ள கால்வாய் தொகுதிகளைப்புனரமைத்தல்
7.5 அளுத்வெவ பிரிவில் உள்ள கால்வாய் தொகுதிக்குரிய பாதைகளைப்புனரமைத்தல்
7.6 சேனபுர பிரிவிலுள்ள ருஹுணுகெத்த பிரிவின் வாய்க்கால்களைப் புனரமைத்தல்
7.7 சிங்கபுர பிரிவிலுள்ள கால்வாய் தொகுதிகளுக்குரிய பாதைகளைப்புனரமைத்தல்
7.8 மெணிக்தெனிய பிரிவில் உள்ள வாய்க்கால்களுக்குரிய வீதிகளைப் புனரமைத்தல்

## 8. பொது வசதிகள் அபிவிருத்தி

**8.1** லக்ஷஉயன கனிஷ்ட வித்தியாலயத்தின் பல்செயற்பாட்டு கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்தல்
**8.2** பழைமைவாய்ந்த வெள்ளைமாளிகை கட்டிடத்தைத் திருத்தியமைத்தல்
**8.3** வெலிகந்த ஆசிரியர் விடுதியின் மிகுதி வேலைகளைப் பூரணப்படுத்தல்
**8.4** வெலிகந்த ஆசிரியர் விடுதிகான தளபாட உபகரணங்களை வழங்குதல்
**8.5** எலஹர பிரேதம் எரியூட்டும் தகனச்சாலையின் எஞ்சிய வேலைகளை நிறைவுசெய்தல்
**8.6** லக்ஷஉயன சனசமூகநிலையத்தினை நிர்மாணித்தல்
**8.7** லக்ஷஉயன சனசமூக நிலையத்திற்கான உபகரணங்களை வழங்குதல்
**8.8** றோயல் கல்லூரியினை நவீனமயப்படுத்தல்
8.9 திம்புலாகல ஆயுர்வேத கட்டிடத்தினுடைய எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல் I ஆம் கட்டம்
8.10 திம்புலாகல ஆயுர்வேத கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல் **II**ஆம் கட்டம்
8.11 கிரித்தலேகம மகாவித்தியாலய கேட்போர் கூடத்தின் ஒலிபெருக்கித் தொகுதிக்குரிய அறை வசதியினை ஏற்படுத்துதல்

மேற்குறித்த கருத்திட்டங்களுக்காக ரூ.**400**மில்லியன்**2015**ஆம் வருடத்தில் செலவுசெய்யப்பட்டுள்ளது.

- **கம்பஹா பஹல யாகொட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

1. கம்/ சுவர்ணபாலி மகாவித்தியாலயத்தினை மேம்படுத்துதல்
2. பஹல யாகொடவினை பிரதானமாகக் கொண்டு வீதித் தொகுதியினை விரிவாக்குதல் மற்றும் விஸ்தரித்தல்
3. பஹல யாகொட மற்றும் அண்மித்த நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தொகுதியினை முன்னேற்றுதல்
4. யாகொட–ஒறுதொட்ட வயல்வெளிப் பிரதேசங்களுக்குரிய நீர்ப்பாசன பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் விவசாய உற்பத்திப் பெருக்கத்தினை அதிகரித்தல்
5. பஹல யாகொட குடிநீர் வசதியினை விரிவுபடுத்துதல்
6. பஹல யாகொட பிரதேச இளைஞர் யுவதிகளின் தொழிற்பயிற்சி மற்றும் திறன் விருத்தி
7. பஹல யாகொடவினை பிரதானமாகக்கொண்டு கிராமியக் கைத்தொழில்களை உருவாக்குதல்

## 05. அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பிரிவு

**பணி**

**நல்லாட்சிக்கமைவாக புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கைச் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல் வழங்கல்**

### அறிமுகம்

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டதிட்டங்கள் ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களால் செயற்படுத்த வேண்டியதாக குறிப்பிடப்படும் கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல்.

### பொதுவான குறிக்கோள்கள்/கருமங்கள்

மேற்கூறப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய வினைத்திறனாகவும் சுறுசுறுப்பாகவும் நிறைவேற்றுதல்.

### *2015* ஆண்டின் அடைவுகள்

| *I.அரசியலமைப்பு மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பதவிகளுக்கான நியமனங்கள்* | |
|---|---|
| • *அமைச்சரவை அமைச்சர்கள்* | 46 |
| • இராஜாங்க அமைச்சர்கள் | 19 |
| • பிரதி அமைச்சர்கள் | 23 |
| • மாகாண ஆளுநர்கள் | 09 |
| • பிரதம நீதியரசர் அவர்கள் | 01 |

| | |
|---|---|
| • மீயுயர் நீதிமன்ற நீதியரசர்கள் | 02 |
| • மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் | 03 |
| • மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 14 |
| • நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் | 01 |
| • மீயுயர் நீதிமன்ற வளாக முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | 02 |
| • மேல் நீதிமன்ற ஆணையாளர்கள் | 03 |
| • சனாதிபதி சட்டத்தரணிகள் | 02 |
| • இலங்கை நியாய சபை நிறுவனத்தின் உறுப்பினர்கள் | 02 |
| • சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்கள் | |
| ➢ மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் | 05 |
| ➢ எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்கள் | 03 |
| ➢ தேசிய பெறுகை ஆணைக்குழு உறுப்பினர்கள் | 05 |
| ➢ பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் | 09 |
| ➢ தேசிய பொலீஸ் ஆணைக்குழு உறுப்பினர்கள் | 07 |
| ➢ இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்யும் விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்கள் | 03 |
| ➢ இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்யும் விசாரணை ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் | 01 |
| ➢ தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் | 03 |
| ➢ நிதி ஆணைக்குழு உறுப்பினர்கள் | 05 |
| ➢ கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் | 05 |
| • அமைச்சுக்களின் செயலாளர்கள் | 45 |
| • மாகாண பிரதம செயலாளர்கள் | 04 |
| • அரசியலமைப்பின் 34 ஆவது உறுப்புரைக்கமைய சனாதிபதி மன்னிப்பு வழங்குதல் | 06 |
| • ஆயுதப் படைகளின் அலுவலர்கள் | |
| ➢ இராணுவத் தளபதி | 01 |
| ➢ கடற்படைத் தளபதி | 01 |
| ➢ விமானப்படைத் தளபதி | 01 |
| ➢ பாதுகாப்பு பதவிநிலை பிரதானி | 01 |
| • கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 01 |
| • பல்கலைக்கழக வேந்தர்கள் | 02 |
| • பல்கலைக்கழக உபவேந்தர்கள் | 06 |

| | |
|---|---|
| • இலங்கைத் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் | 03 |
| • பொது ஒப்பந்த உடன்படிக்கை பதிவாளர் | 01 |
| • சாரணர் தலைமையக ஆணையாளர்கள் | 03 |
| • சாரணர் மாவட்ட ஆணையாளர்கள் | 06 |
| • தேசிய மாணவ பயிலிளவல் பணிப்பாளர் | 01 |
| • மத்திய சுற்றாடல் அதிகாரசபை உறுப்பினர்கள் | 03 |
| • இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் | 01 |
| • ரணவிரு சேவா அதிகாரசபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | 05 |
| • தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உறுப்பினர்கள் | 13 |
| • இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவன முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | 08 |
| • தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவன ஆராச்சி சபை உறுப்பினர்கள் | 02 |
| II. **காணி உறுதிகள், நீண்டகால குத்தகை முறிகள்** | |
| • நீண்டகால குத்தகை முறிகள் வழங்குதல் | 267 |
| • அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கான அளிப்புப் பத்திரங்களை வழங்குதல் | 166 |
| • ரணவிரு உறுதிகளை வழங்குதல் | 22 |
| • சுனாமி அளிப்புப் பத்திரங்களை வழங்குதல் | 1113 |
| • விகாரைகளுக்கான அளிப்புப் பத்திரங்கள் | 66 |
| • இலங்கை முதலீட்டுச் சபைக்கு காணிகளை வழங்குதல் | 02 |
| • நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளை வழங்குதல் | 03 |
| • தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளைக் கையளித்தல் | 07 |
| • மாற்றுக் காணிகளை வழங்குதல் | 09 |
| • மகாவலி குத்தகை முறிகள் | 52 |
| • மகாவலி அளிப்புப் பத்திரங்களை வழங்குதல். (அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கு) | 52 |
| • மகாவலி அளிப்புப் பத்திரங்களை வழங்குதல். (காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ்) | 5856 |
| • மகாவலி விகாரைகள் | 08 |
| • கங்கைக்கரை அபிவிருத்தி சபை ஒழிக்கப்பட்டதன்பேரில் சேவைகளை இழந்த ஊழியர்களுக்கு அளிப்புப் பத்திரங்களின்பேரில் காணிகளை வழங்குதல் | 37 |
| • புதிய ரண்பிம அளிப்புப் பத்திரங்கள் | 7900 |
| • அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் உறுப்புரையை இரத்துச்செய்தல் | 19 |

| | |
|---|---|
| • அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 4(1)ஆம் பிரிவின்மூலம் இரத்துச்செய்து 4(3) பிரிவின்மூலம் புதிய அளிப்புகளை வழங்குதல் | 1532 |
| • மத்திய வகுப்பு காணிகள் | 13 |
| • அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 104ஆம் பிரிவினால் இரத்துச்செய்தல் | 32 |
| III. **பெறுகை மேன்முறையீட்டுச் சபை** | |
| • பெறுகை மேன்முறையீட்டுச் சபைக் கூட்டம் | 33 |
| **IV. படைதாங்கு சேவைகளின் உறுப்பினர்களுக்கு வீரப் பதக்கம் அளித்தல்** | 551 |
| V. முப்படை நியமனப்பத்திரம் அளித்தல் | 190 |
| VI. அதிகாரப்பத்திரங்களை அளித்தல் (விமானப்படை) | 149 |
| **VII. அதிகாரப்பத்திரங்களை அளித்தல் (கடற்படை)** | 16 |
| VIII. அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளினதும்,அலுவலர்களினதும் வெளிநாட்டுவிடுமுறைகளுக்காக அங்கீகாரம் வழங்குதல் | 390 |
| IX. மக்கள் பிரிதிநிதிகளின் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் மக்கள் பிரிதிநிதிகள் செயற்படவேண்டிய முறை தொடர்பான சுற்றுநிருபங்களை வெளியிடுதல் | 01 |

## 06. உள்ளக நிர்வாகப் பிரிவு

**பணி**

**சனாதிபதி அலுவலகத்தின் வினைத்திறனை உயர்த்தும் நோக்குடன் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளின் தேவைப்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்காக நிர்வாக ரீதியான ஒத்துழைப்புகளை வழங்கல்**

### அறிமுகம்

சனாதிபதி அலுவலகம் மற்றும் சனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கருமங்களை உற்பத்தித்திறனாகவும், வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலக இடவசதி, பௌதீக வளங்கள் மற்றும் சேவைகளை வழங்குதலும் முகாமைத்துவம் செய்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

### பொதுவான குறிக்கோள்/கருமங்கள்

- அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளுக்குரிய இடவசதி, உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்
- விசேட அரச விழாக்களை ஏற்பாடு செய்தல், அவற்றுக்குரிய வசதிகளை வழங்குவதற்குத் தேவையான உள்ளக மற்றும் வெளியக தரப்பினருடன் செயற்படுதல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரமுகர்களின் இறுதிநிகழ்வுகள் தொடர்பில் கிடைக்கும் ஆலோசனைகளுக்கமைய செயற்படுதல் மற்றும் குறித்த செலவுகளைத் தீர்த்தல்
- நீர் / மின்சார/ தொலைபேசி கட்டணங்களை தாமதமின்றி செலுத்த நடவடிக்கை எடுப்பதனூடாக தண்டப்பணம் செலுத்துதலைக் குறைத்தல்
- வருடாந்த பொருட்கள்மீளாய்வு சபைகளை நியமித்தல்,பொருட்கள்மீளாய்வுகளை நடத்துதல்,பொருட்கள்மீளாய்வு சபை அறிக்கைகளுக்கமைய அகற்றவேண்டிய பொருட்களை ஏலத்தில் விற்றல்/ அழித்தல் மேற்கொள்ளப்பட்டு உரியவாறு பொருட்பதிவேட்டினை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

- அனைத்துப் பிரிவுகள் / அலகுகளிலிருந்து ஆவணக்காப்பகத்துக்கு அனுப்பப்படும் கோவைகளை முறைப்படி பேணுதல் / பராமரித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்

- கிடைக்கும் வெளிச்செல்லும் தபால்கள், அலுவலகத்தின் தபால் பிரிவினால் முறைப்படியும் தாமதமின்றியும் பொறுப்புடனும் உரிய பிரிவுகள் / அலகுகளுக்கு அனுப்ப நடவடிக்கைகளை எடுத்தல்

- சனாதிபதி அலுவலகத்தின் அனைத்து கட்டிடங்களினதும் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் கடற்படைப் பொறியியல் பிரிவின் ஒத்துழைப்புடன் முன்னுரிமைப்படி மேற்கொள்ளுதல்

- வருடாந்த பெறுகைச் செயற்பாடுகளுக்கமைய ஆண்டுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்தல், வழங்குனர்களைப் பதிவுசெய்தல், அதற்கமைய பொருட்களைக் கோருதல், பொருட்களை வழங்குதல்

- சனாதிபதி அலுவலகத்தினால் தயாரிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றுநிரூபங்கள், பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்கள், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு அனுப்பப்படும் ஆவணங்கள் மற்றும் கிடைக்கும் ஆவணங்களை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மொழிபெயர்த்தல் மற்றும் உரைபெயர்ப்புச் சேவைகள் வழங்குதல்

## 2015ஆண்டின் அடைவுகள்

### 01. இராஜதந்திர விழாக்கள்

இராஜதந்திர விழாக்களை ஏற்பாடு செய்தல், அவற்றின் அனைத்து கருமங்களுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தல் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சிறப்பான கருமமாகும். இராஜதந்திர விழாக்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனமெடுத்து உரிய தரப்புக்களிடம் விழாவுக்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல் ,அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், மேற்பார்வை மற்றும் தொடராய்வு செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

- வெளிவிவகார அமைச்சுடன் ஆரம்ப கலந்துரையாடலை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல்

- சனாதிபதி செயலாளரின் தலைமையில் முப்படை, போக்குவரத்து போலீஸ் மற்றும் தொடர்புடைய ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடல் நடாத்துதல்

- படையினரின் மரியாதை அணிவகுப்புக்காக விசேட மேடை அமைத்தல், செங்கம்பளம் விரித்தல், படையினரின் மரியாதை அணிவகுப்பு மற்றும் பீரங்கி மரியாதை வேட்டுக்களைத் தீர்த்தல் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.



- அரசுத் தலைவர் சந்திப்பு. இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மற்றும் இருதரப்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடுதல் போன்றவற்றுக்கான வசதிகளை வழங்குதல்

- உபசரிப்பு, அலங்கரித்தல் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்

- தேவையான சந்தர்ப்பங்களில் பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

**2015 ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இராஜதந்திர நிகழ்வுகள்**

- **2015 .01.13 -** அதிவணக்கத்துக்குரிய பாப்பரசர் பிரான்ஸிஸ் அவர்களது விஜயம்
- **2015.03.13** - இந்தியப் பிரதமரின் விஜயம்
- **2015.03.24** - கட்டார் அரச தலைவர் ஷெய்க் தமீம் பின் ஹமாத் அல் தானீ அவர்களது விஜயம்
- **2015.04.09** - பூட்டான் பிரதமரின் விஜயம்
- **2015.08.31** - ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹர்ஸாய் அவர்களது விஜயம்

## 02. ஏனைய விழாக்கள்

- **அதிசிறப்புச் சேவை விபூஷண விருதுவழங்கல்**

  பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழாவுக்குத் தேவையான மண்டப, இருக்கை, உபசரிப்பு, அலங்கரித்தல் வசதிகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டதுடன் உரிய அமைச்சினால் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது.

- **சுற்றாடல் முன்னோடி சனாதிபதி பதக்கம் அளித்தல்**

  கோட்டை சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த விழாவுக்கான அனைத்து வசதிகளும் இப்பிரிவினால் வழங்கப்பட்டதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உரிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டது.

## 03. நியமனப் பத்திரம் வழங்கும் விழா

- **2015.04.29** ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரங்கள்வழங்கப்பட்ட நாடுகள்
  - பஹரேன்
  - ஹங்கேரி
  - பிரித்தானியா
  - பிரான்ஸ்

- **2015.05.12** ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரத்தைக் கையளித்த நாடுகள்
  - தென் சூடான்
  - பாகிஸ்தான்

- **2015.07.07** ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரத்தைக் கையளித்த நாடுகள்
  - கென்யா
  - கானா
  - ஜப்பான்
  - சிங்கப்பூர்

- **2015.09.18** ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரத்தைக் கையளித்த நாடுகள்
  - ஈக்வடோர்
  - அல்ஜீரியா
  - நோர்வே
  - துருக்கி

- **2015.11.05**ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரத்தைக் கையளித்த நாடுகள்

  - கஸகஸ்தான்
  - சைபீரியா
  - குவைட்

அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனப்பத்திரம் வழங்கப்படும்போது











- அதிமேதகு சனாதிபதி அவர்களால் தொடர்ச்சியாக தனிப்பட்ட பயன்பாட்டுக்கு எடுக்கப்படாதபோதிலும் சனாதிபதி அலுவலகத்தின் பொறுப்பிலுள்ள சனாதிபதி மாளிகைகளின் வரலாற்றுப் பெறுமானங்கள் சிதைவுறாதவாறு அவற்றின் பழைமையைப் பாதுகாத்துக்கொண்டு பேணலும், அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குதல், மேற்பார்வை மற்றும் தொடராய்வு செயற்பாடுகள் இப்பிரிவினால் தொடர்சியாக மேற்கொள்ளப்படுகிறது.



சனாதிபதி மாளிகை – கொழும்பு



சனாதிபதி மாளிகை – கண்டி



சனாதிபதி மாளிகை - நுவரெலியா

## 07. மனித வள அபிவிருத்திப் பிரிவு

### அறிமுகம்

சனாதிபதி அலுவலக ஆளணியை ஆட்சேர்ப்பு செய்தல்,இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தாபன செயற்பாடுகள் மற்றும் ஆளணியினரின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்க்காக செயற்படுதல்.

### பொதுவான குறிக்கோள்கள்/கருமங்கள்

- சனாதிபதி அலுவலக ஆளணியை ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றம், பதவியுயர்வு,ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தாபன செயற்பாடுகள்
- சனாதிபதி அலுவலக ஆளணிக்கென நி.பி. 71 க்கமைய பதவிகளை ஏற்படுத்தல் தொடர்பான செயற்பாடுகள்
- சனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய ஆளணிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களின் சுயவிபரக்கோவைகளை இற்றைப்படுத்தி பேணுதல்.
- சனாதிபதி அலுவலக ஆளணி அலுவலர்களின் / ஊழியர்களின் பாதுகாப்புத்தடைநீக்க அறிக்கைகளைப் பெறுதல் தொடர்பான செயற்பாடுகள்
- அங்கீகரிக்கப்பட்ட ஆளணி விபரத்தைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்திப் பேணுதல்
- சனாதிபதி அலுவலகத்தின் அமைப்பாண்மை கட்டமைப்பைப் பேணுதல்
- சனாதிபதி ஆளணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அரச சேவையின் நிரந்தர/ தற்காலிக அலுவலர்களின் செயலாற்றுகை மதிப்பீட்டு செயற்பாடுகள்
- சனாதிபதி ஆளணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்காக உள்நாட்டு/ வெளிநாட்டு பயிற்சிகள், அபிவிருத்தி செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்
- அரச அலுவலர்களுக்காக தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின்கீழ் வழங்கக்கூடிய வீடமைப்பு, சொத்துக்கடன், இடர்கடன், உட்பட்ட ஏனைய கடன்களை விதந்துரை செய்தல் / அங்கீகரித்தல்
- சனாதிபதி ஆளணி அலுவலர்களின் விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு, அனுசரணை புகையிரத பருவச்சீட்டு போன்றவற்றை வழங்கும் செயற்பாடுகள்

- அக்ரஹார காப்புறுதி நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளைப் பரிந்துரைத்தல்
- சனாதிபதி ஆளணி அலுவலர்களின் விடுமுறை, மேலதிக நேரக் கொடுப்பனவு,போக்குவரத்துச் செலவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் தொடர்பான பணிகள்
- ஆளணிக்குரிய அலுவலர்களின் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக செயற்படுதல்
- விமான நிலைய விசேட வசதிகளைப் பெறுவதற்கான உரித்துடைய சனாதிபதி அலுவலக ஆளணி அலுவலர்களுக்காக அவ்வசதிகளை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள்
- உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்குரிய விதந்துரைகளை சமர்ப்பித்தல் மற்றும் விசா அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்காகவிண்ணப்பிக்கும்போது சேவையை உறுதிப்படுத்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்களில் பங்குபற்றும் சனாதிபதி ஆளணி அலுவலர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு உரித்தான கொடுப்பனவுகள் மற்றும் அது சார்ந்த செலவுகளைச் செலுத்துதல்
- தீர்வை வரியற்ற வாகன உரிமம் வழங்கல் தொடர்பான கடமைகள்
- நூலகத்துக்குரிய நிர்வாகப்பணிகள்
- மொழியொன்றுக்குக் கூடுதலான மொழிகளில் தேர்ச்சியுடைய அரச அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல் மற்றும் அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்தல் தொடர்பான பணிகள்
- வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகளைப் வைத்திருத்தல் மற்றும் விரலடையாள இயந்திரம் தொடர்பான மேற்பார்வை
- இயங்குதிறனான சேவையிலீடுபடும் அலுவலர்களினதும், சிற்றூழியர்களினதும் மாதாந்த இயங்குதிறனான வேலைத்திட்டங்களைத் தயாரித்தல்

## 2015 ஆண்டின் அடைவுகள்


- ஆட்சேர்ப்புக்கள், இணைப்புச் செய்தல்கள், இடமாற்றங்கள், ஓய்வு பெறுதல்கள், ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான கடமைகள் குறித்த காலப்பகுதியினுள் நியமனங்கள் மற்றும் இணைப்புச் செய்தல்கள் - 326 உம், ஓய்வு பெறுதல்கள் -39 உம், இடமாற்றங்கள் மற்றும் மீளவிடுவித்தல்கள் - 510 உம், அக்ரஹார மருத்துவச்சிட்டை மீளளிப்புகள் - 59 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2015.12.31 ஆம் திகதிவரை ஆளணி**

**அங்கீகரிக்கப்பட்ட ஆளணி : 1496**
**சேவையிலுள்ள ஆளணி : 871**

**2015.12.31 திகதிவரை ஆளணித் தன்மை**

| நிரந்தரம் | தற்காலிக | ஒப்பந்த | இணைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 537 | 198 | 53 | 83 | 871 |




**உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்**

**வெளிநாட்டுப் பயிற்சிகள்**

வெளிநாட்டுவளத் திணைக்களத்தின்மூலம் வெளிநாட்டு பயிற்சிநெறிகளுக்காக அங்கீகாரம் பெற்று அப்பயிற்சிப் பாடநெறிகளுக்காக 2015.01.01 இலிருந்து 2015.12.31 வரை பங்குபற்றிய பதவிநிலை அலுவலர்களின் எண்ணிக்கை 10 ஆகும்

**உள்நாட்டுப் பயிற்சி**

சனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப்பிரிவுகள் மற்றும் அலகுகளிலுமிருக்கும் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்பநிலை அலுவலர்களின் / ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளைவிருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நடாத்தப்பட்டுள்ளது.

| **தொடர் இலக்கம்** | **2015.01.01 இலிருந்து 2015.12.31 வரை நடாத்தப்பட்ட பயிற்சிநெறிகள்** | **பயிலுனர் அணி** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | ஒரு நாள் பணியாரம்ப கருத்தரங்கு | புதிய அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | 65 |
| 02 | உற்பத்தித்திறனூடாக சேவை நிபுணத்துவம் தொடர்பான கருத்தரங்கு | சாரதிகளுக்காக | 133 |
| 03 | "மனப்பாங்கு விருத்தியினூடாக திருப்திகரமான அரச சேவை" பயிற்சிக் கருத்தரங்கு | சுனாதிபதி ஊடகப்பிரிவு அலுவலர்கள் | 90 |
| 04 | புதிய அலுவலகப் பணியாளர்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்கு | புதிய அலுவலகப் பணியாளர்கள் | 38 |
| 05 | மனப்பாங்கு உற்பத்தித்திறனூடாக சேவை நிபுணத்துவம் தொடர்பான தேசிய செயலமர்வு | அதிமேதகு சனாதிபதி அவர்களது நெருங்கிய பாதுகாப்பு பிரிவு அலுவலர்கள் | 125 |
| 06 | நல்லாட்சி மற்றும் தலைமைத்துவம் தொடர்பான தேசிய செயலமர்வு | அதிமேதகு சனாதிபதி அவர்களது நெருங்கிய பாதுகாப்பு பிரிவு அலுவலர்கள் | 140 |

## 08. தாபன ஒருங்கிணைப்புப் பிரிவு

### அறிமுகம்

தாபன ஒருங்கிணைப்பு அலகினால் அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் / அமைச்சுக்கள்/ சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகிறது. அவ்வாறு ஒருங்கிணைப்பு செய்யப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை 21 ஆகும். ஏதாவதொரு நிறுவனத்தில் உள்ளடங்காத பல்வேறு நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### பொதுவான குறிக்கோள்கள்/கருமங்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின்கீழுள்ளஅமைச்சுக்களின் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ளுதல்

- 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கமைய தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வசதிகளை வழங்குதலும் ஒருங்கிணைத்தலும்

- சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள், குழுக்கள் மற்றும் செயலணிகளின் கொள்கை ரீதியான, நிறுவன மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கும் கடிதங்களுக்கு துரிதமாக பதிலளித்தல்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் தாபன, நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- அதிமேதகு சனாதிபதி அவர்கள் சார்பில் மாண்புமிகு பிரதமர் அவர்களால் பதிலளிக்கவேண்டிய சகல பாராளுமன்ற வினாக்களுக்காக உரிய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளை ஒருங்கிணைப்புச்செய்து பதில் வழங்குதல்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின்கீழுள்ள அமைச்சுக்களின் (அதிமேதகு சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் நியமனங்கள் தவிர) மற்றும் அமைச்சுக்களின்கீழ் வராத சுயாதீன நிறுவனங்களில் வெளிநாட்டு விடுமுறைகள் மற்றும் தீவுக்கு வெளியே செல்லுதல் தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பணிகள்

- விசேட நபர்களுக்காக இராஜதந்திர உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை வழங்குதல் தொடர்பான பணிகள்

- சமர்ப்பிக்கப்படும் பொது மக்களது முறைப்பாடுகள் தொடர்பான பணிகள்

- வருடாந்த கணக்காய்வுப்பணிகளை நிறைவேற்றுதல்

**2015 ஆம் ஆண்டில் அடையப்பட்டவைகள்**

| நிறுவனம் | நிறைவு செய்யப்பட்ட பணிகள் | மொத்தம் |
|---|---|---|
| **அதிமேதகுசனாதிபதி அவர்கள் அமைச்சராகப் பதவி வகிக்கும் அமைச்சுக்களுடன் தேவையான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைப்புக்களைச் செய்தல்** | | |
| பாதுகாப்பு அமைச்சு | - | - |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | பல்வேறு நடவடிக்கைகள் | 02 |
| தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு | நிறுவன நடவடிக்கைகள் | 07 |
| **19ஆம் அரசியலமைப்பின்கீழ் நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் ஒருங்கிணைப்புப் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்** | | |
| தேர்தல் ஆணைக்குழு | அலுவல்கள் ஆரம்பிக்கப்படவில்லை | |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 07 |
| | பல்வேறு கோரிக்கைகள் | 03 |
| தேசிய பொலிஸ் ஆணைக்குழு | சேவையினை நீடித்தல் | 08 |
| | வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | 2013 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் |
| | பல்வேறு கோரிக்கைகள் | 05 |
| | செயலாளரின் விடுமுறைகளை அங்கீகரித்தல் | 08 |
| கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை | |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | நிறுவன நடவடிக்கைகள் | 25 |
| | மக்கள் முறைப்பாடுகள் | 08 |
| | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 19 |
| | கட்டிடத்தினைக் கொள்வனவு செய்தல் | 10 |
| | ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரித்தல் | 11 |
| | பணியாளர் தொகுதி முறைப்பாடுகள் | 04 |
| | வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | 2012 ஆம் வருட வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் |

| | | |
|---|---|---|
| இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்யும் விசாரணை ஆணைக்குழு | வெளிநாட்டு விடுமுறைகளை அனுமதித்தல் | 06 |
| | தாபன நடவடிக்கைகள் | |
| | இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கட்டிடமொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகள் | 04 |
| | பல்வேறு மனுக்கள் | 01 |
| | வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | இதுவரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாத அனைத்து ஆண்டுகளுக்கும் உரிய அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது |
| நிதி ஆணைக்குழு | தாபன நடவடிக்கைகள் | 10 |
| | அலுவலக கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல் | 05 |
| | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 07 |
| எல்லை நிர்ணய ஆணைக்குழு | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை | |
| தேசியப் பெறுகை ஆணைக்குழு | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை | |
| அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள், சனாதிபதி செயலணிகள் மற்றும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| அமைச்சரவை அலுவலகம் | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 03 |
| | தாபன நடவடிக்கைகள் | 16 |
| தேர்தல் திணைக்களம் | 2015 சனாதிபதி தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் | 02 |
| | 2015 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் | 33 |
| | திணைக்களத்தின் அலுவலர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குதல் | 02 |
| | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 24 |
| | தாபன நடவடிக்கைகள் | 21 |
| | நி.ஓ.71 இன் கீழ் புதிய பதவிகளை ஏற்படுத்துதல் | 03 |

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம் | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 17 |
| | தாபன நடவடிக்கைகள் | 43 |
| | கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக ஆட்சேர்த்தல் தொடர்பான நேர்முகப் பரீட்சை குழு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 06 |
| | கணக்காய்வுப் பரீட்சகர், மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி, உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 08 |
| | ஓய்வுபெறச் செய்தல் | 03 |
| | பல்வேறு நிறுவனங்களுக்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் | 06 |
| | பல்வேறு மனுக்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் | 22 |
| நீதிச்சேவை ஆணைக்குழு | தாபன நடவடிக்கைகள் | 02 |
| | வருடாந்த அறிக்கை | 2013, 2014 வருடங்களுக்கு உரித்தான வருடாந்த அறிக்கைகளை அனுப்பி வைக்கு மாறு அறிவிக்கப் பட்டுள்ளது |
| தேசிய கல்வி ஆணைக்குழு | தாபன நடவடிக்கைகள் | 21 |
| | பதவிநிலை உத்தியோகததர்கள் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு | 3 |
| பாரிய மோசடிகள், ஊழல்கள், அரச வளங்கள் சிறப்புரிமை அதிகாரங்களை துஷ்பிரயோம் செய்தல் தொடர்பில் விசாரணை செய்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு | பற்றுச்சீட்டுக்களை தீர்த்தல் | 79 |
| | தாபன நடவடிக்கைகள் | 44 |
| | பல்வேறு நடவடிக்கைகள் | 30 |
| காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு | தாபன நடவடிக்கைகள் | 23 |
| | சில்லறைக் கட்டுநிதியம் | 38 |
| | பற்றுச்சீட்டுக்களை தீர்த்தல் | 49 |
| | சம்பளங்களைச் செலுத்துதல் | 14 |
| | மக்கள் சந்திப்புக்களை நடாத்துதல் | 99 |
| அரச சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான விசேட சனாதிபதி செயலணி | தாபன நடவடிக்கைகள் | 05 |

| | | |
|---|---|---|
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | வெளிநாட்டு விடுமுறைகள் | 48 |
| | வீசா வழங்குதல் மற்றும் அங்கீகரித்தல் | 98 |
| | தாபன நடவடிக்கைகள் | 20 |
| | பல்வேறு நடவடிக்கைகள் | 35 |
| இலங்கை மன்றம் | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 26 |
| | தாபன நடவடிக்கைகள் | 15 |
| | வருடாந்த அறிக்கை | 2012, 2013 மற்றும் 2014 வருடாந்த அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அறிவித்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| | இலங்கை மன்றத்திற்கு சொந்தமாகவிருந்த இலங்கை மூபவாஹினி பயிற்சி நிறுவனம் தொடர்பான கடித நடவடிக்கைகள் | 01 |
| | சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்தல் | 01 |
| நிருவாக மேன்முறையீட்டு நியாய அதிகாரசபை | தாபன நடவடிக்கைகள் | 09 |
| | அலுவலகத்தினைத் தாபிப்பதற்குக் கட்டிடமொன்றை வழங்குதல் தொடர்பான கோரிக்கை | 01 |
| | வருடாந்த அறிக்கை | 2012, 2013 மற்றும் 2014 வருடங்களுக்குரிய ஆண்டு அறிக்கைகளை கோருவதற்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. |
| எஸ்.டபிளிவ்.ஆர்.டி.பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றம் | தாபன நடவடிக்கைகள் | 21 |
| | பல்வேறு கோரிக்கைகள் | 2 |
| நிருவாக நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | தாபன நடவடிக்கைகள் | 26 |
| | நடைமுறைப்படுத்தப்படாத விதந்துரைகள் | 15 |

| | | |
|---|---|---|
| ஜே.ஆர்.ஜயவர்தன நிலையம் | தாபன நடவடிக்கைகள் | 37 |
| தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு | பராமரிப்பு நடவடிக்கைகள் | 87 |
| | மின்சாரப் பட்டியல்களைத் தீர்த்து வைத்தல் | 31 |
| | நீர்ப்பட்டியல்களைத் தீர்த்து வைத்தல் | 30 |
| | தொலைபேசி மற்றும் இணையத்தளங்களைத் தீர்த்தல் | 15 |
| | செய்திப் பத்திரிகைக் கட்டணங்களைத் தீர்த்து வைத்தல் | 12 |
| | நிலையத்தினை ஒதுக்கீடு செய்துகொள்ளல் | 25 |
| | துப்புரவு நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்கள் | 12 |
| | பெறுகைக்குழுக்களை நியமித்தல் | 19 |
| | சில்லறைக் கட்டுநிதியம் | 12 |
| | பல்வேறு நடவடிக்கைகள் | 80 |
| | பணியாட்டொகுதி | 12 |
| | கட்டிட நடவடிக்கைகள் | 14 |
| **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்** | | |
| உபாய முறையிலான முயற்சியாண்மை முகாமைத்துவ நிறுவனம் | தாபன நடவடிக்கைகள் | |
| | பல்வேறு நடவடிக்கைகள் | |
| **பல்வேறு நடவடிக்கைகள்** | | |
| பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை பிரதம மந்திரியின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் | | 07 |
| மாகாண முதலமைச்சர்களின் வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல் | 20 |
| | மாகாண சபைகளின் சிறப்புரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் | 4 |
| | நாட்டிலிருந்து வெளிச்செல்லுதல் தொடர்பான உசாவுதல்கள் | 6 |
| இராஜதந்திர அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | | 02 |
| இலங்கை பாராளுமன்ற அலுவலர்களின் வெளிநாட்டு விடுமுறைகள் | | 02 |

# 09. கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு

**அறிமுகம்**

அதிமேதகு சனாதிபதி அவர்களின் கட்டளைகள் மற்றும் சனாதிபதியின் செயலாளரது ஆலோசனைகளின்கீழ் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் திரு.கிங்ஸ்லி பெர்ணாந்து அவர்களின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு செயற்படுகின்றது.

**பொது நோக்கங்கள் / செயற்பாடுகள்**

- கொள்கைத் தயாரிப்பை இலகுபடுத்தலும் ஒருங்கிணைத்தலும்
- மாவட்ட அபிவிருத்திப் பணிகள் “மைத்திரி ஆட்சி - நிலையான நாடு” எனும் கொள்கைப் பிரகடனத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதை உறுதிப்படுத்தல்
- “முன்னேற்றம் மற்றும் பொறுப்புகளுடன்கூடிய அரசதுறை”, “மைத்திரி ஆட்சி - நிலையான நாடு” எனும் கொள்கைப் பிரகடனத்துக்கமைய அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு
- அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பணிகள்
- சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகளையும் மற்றும் சமூகத் தேவைகள்பற்றி கற்றாராய்தல்
- கொள்கைத் தயாரிப்புக்கு வேண்டிய தரவுகளையும் தகவல்களையும் ஒன்றுசேர்த்தலும் பகுப்பாய்தலும் தேவைக்கேற்றவாறு அறிக்கையிடுதலும்
- போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அனைத்துத் தரப்பினர்களுடன் கூட்டிணைத்தல் மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு உதவியளித்தலாகும். இதன் முக்கிய நோக்கமாவது ஐந்து வயதுக்குக்குறைந்த பிள்ளைகளுக்கிடையில் குட்டைத்தன்மை மற்றும் குறைநிறைவுத்தன்மையை 40% ஆல் குறைத்தல், மெலிவடைதலை 5% வரை குறைத்தல், நிறைகூடிய பிள்ளைகளின் சதவீதத்தை மேலும் உயர்வடையாதிருப்பதற்குரிய நடவடிக்கை எடுத்தல், குறைநிறை பிறப்புகள் மற்றும் பெண்களுக்கிடையில் குறைநிறை, நிறைகூடிய தன்மையினை 30% வரை குறைத்தல், குருதிச்சோகை உள்ள மட்டத்தைவிட 50% தினால் குறைத்தல் என்பனவாகும்

## 2015 ஆம் ஆண்டு எய்துகொண்ட அடைவுகள்

2015 ஆம் ஆண்டின் மேற்குறித்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இப்பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்களினதும், நிகழ்ச்சித்திட்டங்களினதும் எண்ணிக்கை பின்வருமாறு:

| காரணம் | கூட்டங்கள்/செயற்பாடுகள் |
|---|---|
| அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் | 15 |
| சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் | 12 |
| சனாதிபதியின் மேலதிகச் செயலாளரின் தலைமையில் | 24 |
| ஏனையவை | 09 |
| மொத்தம் | 60 |

இதன்போது,

### 1. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு

இதன்கீழ் சகல அமைச்சுக்களிலும் 2015 ஆம் ஆண்டின் முதலிரு காலாண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியத்தை உபயோகித்து செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 714 இன் முன்னேற்ற மீளாய்வு உரிய உத்தியோகத்தர்களைக்கொண்டு செய்யப்பட்டது.

### 2. விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கமைய மாவட்ட மட்டத்தில் அரச நிறுவனங்கள், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக செயற்படுத்தப்படும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல், செயற்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்யும் நோக்குடன் பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இக்குழுக்கூட்டங்களின் பின்னாய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அவ்வாறே கண்டி நகரத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை விசேடமாகத் தேடிவிசாரித்துப்பார்க்குமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தெரிவிக்கப் பட்டமையினால் அதுதொடர்பான 3 ஆரம்ப பின்னாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதனூடாக பல சிக்கல்கள் தீர்த்துவைக்கப்பட்டன.

## 3. அமைச்சுக்களின் கொள்கை ஒருங்கிணைப்பு

அமைச்சுக்களில் காணப்படும் சிக்கலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சில தொழிற்சங்கங்களின் சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கும் தலையீடு செய்து உரிய பிரிவினரை அழைத்து கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன. இதன்கீழ் அமைச்சுக்களில் பொதுவான நிருவாகத்தில் மேலோங்கும் சிக்கல்கள் மற்றும் தேசிய மட்ட தலையீடுகளினால் ஏற்படும் பொறுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் பின்னாய்வு, தொழிற்சங்கங்களின் மனக்குறைகள் தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலையீடு தேவையான சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்பட்ட கடமைகளும் உள்ளடங்கும். இது தொடர்பான நேரடி தலையீடுகள் 36 ஆகும்.

## 4. போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு மாதம் 08.07.2015 தொடக்கம் 09.08.2015 வரை என பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர் இப்பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் மாவட்ட செயலகங்கள் 25 மற்றும் பிரதேச செயலகங்களினால் 3776 நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டதுடன் அதனூடாக 418984 நபர்கள்வரையில் இப்பிரிவின் மேற்பார்வையில் அறிவுறுத்தப்பட்டனர். இதற்கு மேலதிகமாக சகல அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தினூடாக 6049 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 705447 நபர்கள் வரையில் இப்பிரிவின் ஆலோசனையின் கீழ் அறிவுறுத்தப்பட்டனர்.

## 5. போசணை நிகழ்ச்சித்திட்டம்

2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

- போசணை தொடர்பான பல்துறை செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் அதுவரை செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் மீளாய்வு.
- சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர்களின் பங்களிப்புடன் தேசிய போசணை நெறியாள்கை குழுக் கூட்டம் சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டமை
- தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் போசணை தொடர்பான நெறியாள்கை குழுக்களை ஸ்தாபித்தல்.
- கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் போசணை மேம்பாட்டுக் குழுக்களை ஸ்தாபித்தல்.

### அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்கள்

| | |
|---|---|
| மே 08 | போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான தேசிய நெறியாள்கைக் குழு<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| மே 11 | தேசிய இடர் முகாமைத்துவ சபை<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| மே 14 | தேசிய சிறுநீரக நிவாரண மேற்பார்வைக் குழு<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| மே 22 | கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| ஜுன் 23 | விசேட மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் - பொலன்னறுவை மாவட்டம்<br>சனாதிபதி அவர்களின் மாநாட்டு மண்டபம் |
| ஜுன் 25 | உள்நாட்டு இறைவரித் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல்<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| ஜுலை 02 | சூழல்ரீதியானசேதங்கள் தொடர்பாக சூழலலியலாளர்களுடனான கலந்துரையாடல்<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| ஜுலை 09 | போதைப்பொருள் ஒழிப்பு மாதத்தினை பிரகடனப்படுத்தும் தேசிய வைபவம்<br>ஜாஎல நகரசபை விளையாட்டரங்கு |
| ஜுலை 10 | மிருகவதை தடுப்பு தொடர்பான கலந்துரையாடல்<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| ஆகஸ்ட் 31 | போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல்<br>சனாதிபதி அலுவலக கேட்போர் கூடம் |
| ஒக்டோபர் 15 | மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் - அனுராதபுரம்<br>வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடம்<br><br>மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் - கண்டி<br>கண்டி சனாதிபதி மாளிகை |
| ஒக்டோபர் 16 | மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் - பொலன்னறுவை |
| ஒக்டோபர் 30 | அமைச்சரவைக் கூட்டம் |
| திசெம்பர் 22 | 2015 நத்தார் நிகழ்ச்சித்திட்டங்கள் - சனாதிபதி மாளிகை |

**சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்கள்**

| | |
|---|---|
| ஏப்பிரல் 30 | அரச பொசன் வைபவத்தை ஏற்பாடு செய்யும் தேசிய நெறியாள்கை குழுக்கூட்டம் - பெருவிருந்து மண்டபம் |
| மே 12 | சிறுநீரக நோய்த் தடுப்பு செயலாளர்களின் உப குழுக்கூட்டம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் |
| ஜுன் 03 | சிறுநீராக நோய் தடுப்பு தொடர்பாக பங்களிப்புச் செய்யும் தனியார்துறை வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் செயலாளரின் அலுவலகம் |
| ஜுன் 17 | போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் - பெருவிருந்து மண்டபம் |
| ஜுலை 10 | சிறுநீரக நோய் தடுப்பு தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் செயலாளரின் அலுவலகம் |
| ஜுலை 23 | சீன உதவியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட மின்பிறப்பாக்கிகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் செயலாளரின் அலுவலகம் |
| நவம்பர் 26 | பாணம பிரதேச காணி தொடர்பான கலந்துரையாடல் செயலாளரின் உத்தியோகபூர்வ அலுவலகம் |
| நவம்பர் 27 | போசணை தொடர்பான தேசிய குழுக்கூட்டம் சினமன் கிராண்ட் ஹோட்டல் |
| நவம்பர் 30 | கண்டி மாவட்ட குழுக்கூட்டம் - பிரதான பெருவிருந்து மண்டபம் |
| திசெம்பர் 14 | சட்ட வைத்திய சேவையினை மேம்படுத்தல் தொடர்பான கூட்டம் செயலாளரின் உத்தியோகபூர்வ அலுவலகம் |

**சனாதிபதியின் மேலதிகச் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்கள்**

| | |
|---|---|
| மே 06 | போசணை தொடர்பான பல்துறை செயற்றிட்டம் தொடர்பான அபிவிருத்தி பிரிவினருடனான கலந்துரையாடல் ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| மே 07 | சிறுநீரக நோய்த்தடுப்பு தொழில்நுட்ப இணைக்குழுக்கூட்டம் |
| மே 08 | போசணை தொடர்பான பல்துறை செயற்றிட்ட அமைச்சுக்களின் இணைப்பாளர்களின் கலந்துரையாடல் ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| மே 14 | அரச பொசன் வைபவத்தை ஏற்பாடுசெய்யும் தேசிய நெறியாள்கை குழுக் கூட்டம் - பெருவிருந்து மண்டபம் |
| மே 26 | வெளிநாட்டு கடன்/உதவி நிகழ்ச்சித்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - பெருவிருந்து மண்டபம் |
| மே 27 | அபிவிருத்தி கருத்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |

| | |
|---|---|
| மே 28 | அபிவிருத்தி கருத்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| மே 29 | வெளிநாட்டு கடன் உதவி கருத்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - பெருவிருந்து மண்டபம் |
| ஜுன் 01 | அபிவிருத்தி கருத்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஜுன் 03 | அபிவிருத்தி கருத்திட்ட பூர்வாங்க முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் - ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஜுன் 05 | தேசிய கால்நடை வளங்கள் சபைக்குரிய காணி தொடர்பான கலந்துரையாடல் - பெருவிருந்து மண்டபம் |
| ஜுன் 10 | மதிப்பீட்டாளர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் - ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஜுன் 12 | அபிவிருத்தி கருத்திட்ட/ வெளிநாட்டுக்கடன் உதவிக் கருத்திட்ட மதிப்பீடு தொடர்பான கலந்துரையடல்<br><br>தேசிய வரவுசெலவுத் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம்<br>ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஜுன் 25 | குழந்தைகள் மற்றும் சிறுவர் வளர்ச்சி தொடர்பான கற்கைகள் பற்றிய கலந்துரையாடல்<br>ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 03 | கொழும்பு வெளிச்சுற்றுவட்ட வீதியின் கடுவெல – கடவத்தை நகரங்களுக்கிடையிலான பகுதியின் அங்குரார்ப்பண வைபவத்தின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கூட்டம்.<br>பெருவிருந்து மண்டபம் |
| ஆகஸ்ட் 05 | போசணை தொடர்பான பல்துறை செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான கூட்டம்.<br>ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 05 | மதிப்பீட்டாளர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான கூட்டம்<br>ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 10 | இலங்கை தேசிய காலணி தயாரிப்பாளர்கள் மற்றும் தோல் பொருட்கள் கைத்தொழிற்துறையினருடன் இடம்பெற்ற கூட்டம்<br>ஸ்டாண்டட் சார்டட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 13 | போசணைதொடர்பான பல்துறைசெயற்றிட்டத்தினை செயற்படுத்தலுக்கான கூட்டம் - பெருவிருந்து மண்டபம் |
| ஆகஸ்ட் 13 | புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம், பிரதானிகளை நியமித்தல் தொடர்பான கூட்டம்<br>செயலாளரின் அலுவலகம் |
| ஒக்டோபர் 02 | விசாரணை நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் கூட்டம் -செயலாளரின் உத்தியோகபூர்வ அலுவலகம் |

| | |
|---|---|
| நவம்பர் 23 | போசணை தொடர்பான கலந்துரையாடல்<br>ஸ்டாண்டட் சார்ட்ட் கட்டிடம் |
| டிசம்பர் 08 | கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான கூட்டம் - பெருவிருந்து மண்டபம் |
| டிசம்பர் 14 | போசணை தொடர்பான அமைச்சுக்களின் இணைப்பாளர்களின் கூட்டம் - பெருவிருந்து மண்டபம் |
| டிசம்பர் 15 | வேல்ட் விஷன் நிறுவனத்துடன் ஒழுங்குபடுத்தல் குழுக்கூட்டம்<br>ஸ்டாண்டட் சார்ட்ட் கட்டிடம் |

**சனாதிபதியின் சிரேட்ட உதவிச்செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்கள்**

| | |
|---|---|
| ஒக்டோபர் 26 | பாதுகாப்புத் தலைமையக் கட்டிட நிர்மாணம் தொடர்பான கூட்டம்<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு |
| நவம்பர் 16 | நிறுவனங்களின் முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்தல் தொடர்பான கூட்டம்<br>தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு |
| நவம்பர் 17 | பாதுகாப்புத் தலைமையக் கட்டிட நிர்மாணம் தொடர்பான கூட்டம்<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு |
| டிசம்பர் 02 | பாதுகாப்புத் தலைமையக் கட்டிடம் தொடர்பான கூட்டம்<br>ஸ்டாண்டட் சார்ட்ட் கட்டிடம் |

**ஏனைய கூட்டங்கள்**

| | |
|---|---|
| ஆகஸ்ட் 03 | சிறுநீரக நோய்த் தடுப்புத் தொடர்பாக இடம் பெற்ற கலந்துரையாடல்<br>ஸ்டாண்டட் சார்ட்ட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 11 | தேசிய போதைப்பொருள்கள் ஒழிப்பு தொடர்பாக இடம் பெற்ற கலந்துரையாடல்<br>செமா கட்டிடம் |
| ஆகஸ்ட் 13 | YMCA கட்டிடம் தொடர்பான கலந்துரையாடல்<br>ஸ்டாண்டட் சார்ட்ட் கட்டிடம் |
| ஆகஸ்ட் 13 | சீன உதவியின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட மின்பிறப்பாக்கிகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக இடர் உதவி சேவை நிலைய உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் |
| ஆகஸ்ட் 27 | சிறுநீரக நோய்த் தடுப்பு பிரிவிற்கான இணையதள உருவாக்கம் தொடர்பான கூட்டம் |

## 10. நிதி முகாமைத்துவப் பிரிவு

### அறிமுகம்

சனாதிபதி அலுவலகத்தின் சகல நிதிமுகாமைத்துவ நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்




### பொது குறிக்கோள்கள்/ பணிகள்

- நிலையான, தற்காலிக, அமய, ஒப்பந்த மற்றும் இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் கொடுப்பனவுகள் மற்றும் உழைப்பூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச்செலவு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- சனாதிபதி அலுவலகத்திற்கான சேவைகள் மற்றும் வழங்கல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- மாதாந்த கணக்குப்பொழிப்புகள் மற்றும் வங்கிக் இணக்கக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை திறைசேரிக்குச் சமர்ப்பித்தல்
- வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கினை தயாரித்தல் மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்
- வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் திறைசேரிக்கு முன்வைத்தல்
- வரவு செலவுத்திட்டச் செயற்குழு சந்தர்ப்பத்திற்குரிய பணிகள்
- அலுவலக கணக்குகளைத் திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிடுதல்
- ஏனைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை விடுவித்தல்
- உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்குரிய வெளிநாட்டுப் பயணங்களுக்குரிய நடவடிக்கைகள்




**2015 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடுகளும் மொத்த செலவினங்களும்**

| விபரம் | மீள்வரும் செலவினம் (ரூ.மி) | மூலதன செலவினம் (ரூ.மி) |
|---|---|---|
| மொத்த ஒதுக்கீடு | 2,194 | 1,334 |
| மொத்த செலவினம் | 2,116 | 1,191 |
| % | 96.4 | 89.3 |



2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் மொத்த செலவினங்களின் ஒப்பீடு

| வருடம் | மீள்வரும் செலவினம் (ரூ.மி) | மூலதன செலவினம் (ரூ.மி) |
|---|---|---|
| 2014 | 4,693 | 5,183 |
| 2015 | 2,116 | 1,191 |



## 11. உள்ளக கணக்காய்வுப் பிரிவு




### அறிமுகம்

**சனாதிபதி அலுவலகம் மற்றும் அதன்கீழ் உள்ள**

**சகல நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளவும்**

**சனாதிபதியின் செயலாளரினால் கையளிக்கப்படும்**

**விசேட உள்ளக கணக்காய்வு விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும்**

**சனாதிபதியின் செயலாளரின் கீழ்**

**அமைக்கப்பட்டுள்ள பிரிவாகும்**

### பொதுக் குறிக்கோள்கள் / பணிகள்

- சனாதிபதி அலுவலகத்தினதும் சனாதிபதி அலுவலகத்தின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக இடம்பெறும் உள்ளக நிர்வாக முறையில் பங்குபற்றல். அந்நடவடிக்கைகளில் தவறுகள் மற்றும் மோசடிகளைத்தவிர்ப்பதற்கும் அவற்றினை கண்டறிவதற்காகவும் கையாளப்படும் உள்ளக தேடுதல்களின் முறைமை தன்மை மற்றும் போதிய அளவு தொடர்பாக தொடர்ச்சியான பரிசீலனைகள் மற்றும் சுய மதிப்பீட்டினை நடாத்திச் செல்லுதல்.

- வேலைகள்,திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றங்களினை கண்டறிதல் தொடர்பாக சனாதிபதியின் செயலாளருக்கு உதவுதல்

## 2015 ஆம் ஆண்டில் எய்துகொண்ட அடைவுகள்

| தொடர் இல | திட்டம் | நிலை | வினைத்திறன் சதவீதம் |
|---|---|---|---|
| 01 | சனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | நிறைவு | 100% |
| 02 | சனாதிபதி அலுவலகத்தின் பெறுகைகள் பிரிவின் 2014 ஆம் வருடத்திற்கான கொள்வனவுகள் | நிறைவு | 100% |
| 03 | சனாதிபதி அலுவலகத்தின் களஞ்சியசாலை முகாமைத்துவமும் பொருட்களின் வருடாந்த மீளாய்வும் | நிறைவு | 100% |
| 04 | தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பப் பிரிவு | நிறைவு | 100% |
| 05 | 2015 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கான “வவுச்சர்” பத்திரங்களைப் பரிசோதித்தல் | சனவரி முதல் செத்தெம்பர் வரை | 66.6% |
| 06 | “டொங்கல்” மூலமாக இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொடுத்தலும் செய்மதி தொலைக்காட்சி தொடர்பினை பெற்றுக்கொள்ளலும் | நிறைவு | 100% |
| 07 | சனாதிபதி நிதியம் | நிறைவு | 100% |
| 08 | சனாதிபதி நிதியத்தின் தன்னியக்கம் தொடர்பாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மென்பொருள் | நிறைவு | 100% |
| 09 | காசாளரின் நிதி மற்றும் காசேட்டினை பரிசீலித்தல் | நிறைவு | 100% |
| 10 | ஜே.ஆர்.ஜயவர்தன வரலாற்று ஆய்வு,ஆவணக்கூடம் மற்றும் நூலக மத்திய நிலையம் | நிறைவு | 100% |
| 11 | உபாயமார்க்க தொழில்முயற்சிகளின் முகாமைத்துவ நிறுவனம் | நிறைவு | 100% |
| 12 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் (நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள) கூட்டங்கள் - 04 | நிறைவு | 50% |

# 12. சனாதிபதி நிதியப் பிரிவு

**பணி**

**உயிரச்சுறுத்தல் உள்ள நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும், மதங்களை போஷிப்பதற்கும், கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கும், தேசிய மற்றும் மக்கள் நலன்களுக்காக குறிப்பிடத்தக்க சேவைகளினைச் செய்த நபர்களை மதிப்பிடுதலுக்காகவும் வினைத்திறனான பயனுறுதியுள்ள நிதிசார் ஊக்கக் கொடுப்பனவுகள் மற்றும் உதவிகளை வழங்குதல்**

### அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் உள்ளிட்ட கட்டுப்பாட்டாளர் சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கேற்ப சனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட சனாதிபதி நிதியத்தின் பணியாற்றொகுதியினரால் இலங்கை பிரசைகளுக்கு உயிரச்சுறுத்தல் உள்ள நோய்களுக்காக வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தலும், தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த (உயர்தர) கற்கைகளுக்கு நிதி உதவியினைப் பெற்றுக் கொடுத்தலும் மற்றும் ஏனைய கருத்திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்குதலும் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறே அபிவிருத்தி லொத்தர் சபையினால் கிடைக்கும் வருடாந்த வருமானத்தின் 50% மான நிதியினை மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கு பெற்றுக்கொடுத்தலும் சனாதிபதி நிதியத்தின் செயற்பணியாகும்.

### பொது குறிக்கோள்கள் / பணிகள்


1. வறுமை நிலைமைக்கு நிவாரணங்கள் அளித்தல்
2. கல்வியையும், அறிவினையும் மேம்படுத்தல்
3. மதங்களை முன்னேற்றுதல்
4. இனங்களுக்காக சேவை புரிந்துள்ள நபர்களுக்கு வெகுமதிகள் வழங்குதல்
5. சனாதிபதி அவர்களினதும் கட்டுப்பாட்டாளர் சபையினதும் அபிப்பிராயப்படி பொது மக்களின் நலன்களுக்கான பணிகளை நிறைவேற்றுதல்

## *2015* ஆம் ஆண்டில் எய்து கொண்ட அடைவுகள்

2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நிலையான வைப்புக்கான வட்டித்தொகை மற்றும் ஏனைய வருமானங்களாக 1906.85 மில்லியன் ரூபாய்கள் சனாதிபதி நிதியத்திற்கு கிடைத்துள்ளன.

### Sources of Income - 2015

| Income | Amount (Rs. M) |
|---|---|
| Proceeds from Development Lotteries Board | 1750.91 |
| Interest Income | 155.72 |
| Miscellaneous Income | 0.22 |
| **Total** | 1906.85 |





1

2015 ஆம் ஆண்டில் சனாதிபதி நிதியத்திற்கு கிடைத்த வருமானத்தில் வைத்திய உதவிகளுக்காகவும், மகாபொல புலமைப் பரிசில் பொறுப்பு நிதியத்திற்காகவும், கல்வி மற்றும் புலமைப் பரிசில்களுக்காகவும், வேறு விசேட கருத்திட்டங்களுக்காகவும், நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும், மத நடவடிக்கைகளுக்காகவும், கலாச்சார நடவடிக்கைகளுக்காகவும், விளையாட்டு மற்றும் கலைத்துறை நடவடிக்கைகளுக்காகவும் 1826.93 மில்லியன் ரூபாய்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செலவிடப்பட்டுள்ளன.

## Categories of Expenditure – 2015

| Categiries | Amount (Rs. M) |
|---|---|
| Medical Treatment | 900.56 |
| Mahapola Higher Education Trust Fund. | 800.00 |
| Scholarship Scheme & Education | 89.81 |
| Other Special Projects | 20.00 |
| Welfare Activities | 8.56 |
| Religious Activities | 3.65 |
| Cultural Activities | 2.75 |
| Sports and Arts | 1.60 |




3

சனாதிபதி நிதியத்தின் முதலீடுகளாக அரச வங்கிகளில் நிலையான வைப்பாக 1,735 மில்லியன் ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளதோடு, 338 மில்லியன் ரூபாய்கள் திறைசேரி பிணையங்களாகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

## 13. அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

### அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் **"மைத்திரி ஆட்சி – நிலையான நாடு**" எனும் கொள்கை பிரகடனத்தில் " சிறந்த பொருளாதார வலுவினால் கட்டியமுப்பப்பட்ட நற்குணங்களுடன் நிறைந்த ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சமூகம் மற்றும் நல்லாட்சிக்கு முன்னுதாரணமான நாட்டினை " உருவாக்கல் தொடர்பாக பல எண்ணக்கருக்கள் உள்ளடங்கியுள்ளன. அவ் எண்ணக்கருக்களினை செயற்படுத்துவதன் மூலம் இலங்கை தற்காலத்தில் எதிர்நோக்கியுள்ள உணர்வுபூர்வமான சிக்கல்களுக்கு தீர்வு காண்பதன் பொருட்டு அதிமேதகு சனாதிபதி அவர்களின் விசேட கவனத்தின் கீழ் விசேட தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு உருவாக்கப்பட்டது.

இப்பிரிவின்கீழ் பின்வரும் பிரதான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

I. உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

II. சூழல் பாதுகாப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

III. போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

IV. சிறுநீரக நோயத் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

மேற்குறிப்பிட்ட விடயங்களை செயற்படுத்தும் அமைச்சுக்களுடனும் மற்றும் திணைக்களங்களுடனும் இணைந்து சனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் நான்கு செயலணிகளை ஸ்தாபித்து இந்நிகழ்ச்சித்திட்டங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அச்செயலணிகளின் மூலம் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்

- ஒவ்வொரு தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியுடன் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல்
- அமைச்சுக்களுக்குமிடையிலும், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தல்
- சட்டரீதியானதும் கொள்கை ரீதியானதுமான விடயங்கள் தொடர்பில் தலையீடு செய்தல்
- உத்தியோகத்தர்களினதும், நாட்டின் ஒட்டுமொத்த பிரசைகளினதும் எண்ணப்பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்
- அனைவரும் ஒன்றிணைந்த அணுகுமுறையில் செயலாற்றுதல்
- தொடர்ச்சியான பின்னாய்வு
- மேற்பார்வையும் முன்னேற்ற மீளாய்வும்

## உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2016 -2018

### பின்னணி

இலங்கையின் பிரதான உணவு வகைளின் இறக்குமதிக்காக வருடாந்தம் 200 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. எனினும் இறக்குமதி செய்யப்படும் அவ் உணவுகளில் பெருமளவானவற்றை உள்நாட்டிலேயே நச்சுத்தன்மையின்றி, தரமானவகையில் உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் உள்ளதோடு, கால்நடை உற்பத்தியைப் போன்றே மீன் உற்பத்தியினையும் மேலும் அதிகரித்துக் கொள்ளக்கூடிய இயலுமை காணப்படுகின்றது. வருடாந்தம் செலவிடப்படும் இறக்குமதியின் செலவினத்தைக் குறைத்து உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய அனைத்து உணவுவகைகளையும் உச்ச அளவில் இந்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வது காலத்தின் தேவைப்பாடாகவும் மாறியுள்ளது.

மேலும் இலங்கையில் உணவின் நுகர்வுத்தன்மையினை கருத்திற்கொள்ளுமிடத்து போசாக்கியலாளர்களின் சிபாரிசுகளுக்கேற்ப தனிநபர் ஒருவரின் நாளாந்த காய்கறி மற்றும் பழங்களின் நுகர்வு 200 கிராமாக காணப்பட வேண்டுமெனினும் அது 100 கிராம் அளவிலான மட்டத்திலேயே காணப்படுகிறது. அவ்வாறே தனிநபர் ஒருவரின் மீனின் நுகர்வு நாளொன்றிற்கு 100 கிராமாக காணப்பட வேண்டுமெனினும் நாளொன்றிற்கு 40 கிராமாக காணப்படுவதுடன் தனிநபர் ஒருவரின் பால்சார்ந்த உற்பத்திப் பொருட்களின் நுகர்வும் நாளொன்றிற்கு 100 மில்லி லீற்றர் ஆகுமெனினும் அதுவும் கீழான மட்டத்திலேயே காணப்படுதல் இலங்கை மக்களின் போசணை மட்டத்தில் தாக்கத்தை செலுத்தியுள்ளன.

இவ்விடயங்களை கவனத்திற்கொண்டு உள்நாட்டில் உற்பத்திச் செய்யக் கூடிய உணவு வகைகளைப் போன்றே கால்நடை மற்றும் மீன் உற்பத்தியினையும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பதுடன் தரமான உற்பத்திகளைச் செய்து தன்னிறைவுப் பெற்ற போசணை இலக்கினை அண்மிப்பதுடன் அதனூடாக பாரியளவு அந்நியச் செலாவணியினை நாட்டினுள் சேமித்துக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2016 -2018 வரையிலான காலப்பகுதியினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு (அமைச்சரவை பத்திர இலக்கம் 15/1391/701/008) 14.10.2015 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பின்வரும் குறிக்கோள்களை எய்து கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாவன:

- விவசாய சூழல் வலயங்களை அடிப்படையாகக் கொண்ட பயிர் உற்பத்தி செயற்றிட்டமொன்றினை அறிமுகப்படுத்தலும் அதனை செயற்படுத்துவதனூடாக நாட்டில் சமநிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்துதலும்

- தேசிய ரீதியில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுகளினால் நாட்டினைத் தன்னிறைவு பெறச் செய்தல் மற்றும் அதனூடாக உணவு இறக்குமதிக்காக செலவிடப்படும் பாரியளவிலான அந்நியச செலாவணியினைச் சேமித்தல்

- உணவு உற்பத்தியின் போது இரசாயன பசளைகளினதும் களைக்கொல்லிகளினதும் பாவனையினை குறைத்து சூழலுக்கு இயைபான முறைகளைப் பின்பற்றுவதனூடாக தரமான உணவுப் பொருட்களை மலிவுபடுத்துதல்

- ❖ மீன் உற்பத்தி, அதன் நிலை,பண்புத்தரம் மற்றும் சுகாதார பாதுகாப்புத் தன்மை பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள்வரையில் உயர்த்துவதனூடாக நாட்டின் உணவு பாதுகாப்புத் தன்மையினையும் மற்றும் போசணை நிலையினையும் உயர்த்துவதற்கு பங்களிப்புச் செய்தல்

- ❖ உற்பத்தி செய்யப்படும் உணவுகளின் வினைத்திறனான போக்குவரத்து, விநியோகித்தல் மற்றும் மேலதிக உணவு இருப்பினை முறைமையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல்

- ❖ உற்பத்தி நடவடிக்கைகளின்போது தரமான உள்ளீடுகள், உசிதமான தொழில்நுட்பப் பொறிமுறைகளை பாவித்து உற்பத்தியின் பயனுறுதியினை உச்சமட்டமாக பேணலும் உற்பத்தியின் செலவினை குறைத்தலும்

- ❖ தேசிய உணவு உற்பத்தி நடைமுறையுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த தொடர்புகளை உருவாக்குதலும் பாடசாலை மாணவர் சமுதாயம், விவசாய அமைப்புக்கள் உள்ளிட்ட சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தினை இணைப்புச் செய்தல்

**2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்**

| | |
|---|---|
| 20.07.2015 | உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களின் எண்ணக்கருவினை முன்வைத்த முதலாவது கூட்டம் |
| 05.08.2015 | சனாதிபதி அலுவலகத்தில் உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இடம்பெற்ற முதலாவது பயிற்சிப்பட்டறை |
| 21.09.2015 | உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2016-2018) தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டமை |
| 05.10.2015 | அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனைகளுக்கேற்ப முழு நாடும் மலர்ச்சியடையக் கூடிய சிறந்த நிகழ்ச்சித்திட்டக்கொத்தின்மூலம் இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை செயன்முறைப்படுத்தல் கிளிநொச்சி, வட்டக்கச்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டமை |







இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக மாவட்ட மட்டத்திலும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அன்றைய தினம் இடம்பெற்றதோடு,அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டன. 21 மாவட்டங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா.2,395,397/- ஆகும்

**05.10.2015 ஆந் திகதி இடம்பெற்ற உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| மாவட்டம்/இடம் | செயற்பாடுகள் | சனாதிபதி செயலகத்தினால் செய்யப்பட்ட செலவு ரூ. |
|---|---|---|
| **கொழும்பு**<br>மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையம், கபடாவத்த, ஹோமாகம | ➢ 50 பழச்செடிகளை நடுதலும் 10 குடும்பங்களுக்கு 100 கோழிக்குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தலும்.<br>➢ 55 ஏக்கர் பரப்புள்ள வயல் நிலத்தைப் பண்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்<br>➢ பாரம்பரிய நெல் வகைகளை (கஹவனு மற்றும் கொட்டியாரம்) ஒரு புசல் வீதம் பகிர்ந்தளித்தல் | 85,000 |
| **கம்பஹா**<br>போலகல பிரதேச செயலாளர் பிரிவு திவுலுபிட்டிய | ➢ 16 ஏக்கர் பரப்புடைய பழ உற்பத்தி கிராமத்தினை போலகல பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்காக 2000 நாரத்தை செடிகளைப் பகிர்ந்தளித்தல் | 135,486 |

| | | |
|---|---|---|
| **களுத்துறை**<br><br>பழ உற்பத்தி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் கனன்வில, ஹொரண | ➢ பழச்செடிகளை நடுகை செய்தல், விதைநெல்களை பகிர்ந்தளித்தல்,தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள், கோழிக்குஞ்சுகள் மற்றும் சாதிக்காய் செடிகளை பகிர்ந்தளித்தல்,பாடசாலை தோட்டங்களுக்காக விவசாய உபகரணங்களை வழங்குதல் | 119,880 |
| **கண்டி**<br><br>மலுவேகம வெளி,குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு | ➢ ஏர்ப்பூட்டு விழாவினை நடாத்துதல்<br>➢ பயிர்ச்செய்கை கடன் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குதல்<br>➢ விவசாயிகளின் பிள்ளைகளுக்கு சிறுவர் சேமிப்பு கணக்குகளை ஆரம்பித்தல்<br>➢ கமத்தொழில் வியாபார கடன் வழங்குதலும் சம்பிரதாய விதை நெல்களை வழங்குதலும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்குதல்<br>➢ விவசாய ஓய்வூதியம் வழங்குதல்<br>➢ பசுக்கன்றுகளை வளர்க்கும் கருத்திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்குதல் | 69,000 |
| **மாத்தளை**<br><br>மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு | ➢ மா, மாதுளை போன்ற பழச்செடிகளை நடுதல்<br>➢ பால் பண்ணையாளர்கள் ஐவருக்கு அடையாள ரீதியாக காசோலைகள் வழங்குதல்<br>➢ உக்குவளை, இம்புல்பிட்டிய மகாவித்தியாலய காணியில் பயிர்ச்செய்தல்<br>➢ 2 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பில் மா, மிளகு மற்றும் பழச்செடிகளை நடுதல்<br>➢ வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களினை ஆரம்பித்தல் | 60,800 |
| **நுவரெலியா**<br><br>மஹகுடுகல விகாரை | ➢ உருளைக்கிழங்கு விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துதல்<br>➢ எதிர்வரும் போகத்திற்கான உருளைக்கிழங்கு விதைகளை வழங்குதல் | 52,525 |
| **காலி**<br><br>லபுதுவ அரச விவசாய பண்ணை | ➢ குறைவிருத்தியுடைய உள்நாட்டு பழச்செடிகளை நடுதல்<br>➢ தகுதியான விவசாயிகளுக்கு 500 தென்னங்கன்றுகள், கறுவாச் செடிகள், மிளகுச் செடிகள், புத்தாக்க விதைநெல்கள் மற்றும் சேதனப் பசளையினை வழங்குதலும் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தலும் | 128,600 |

| | | |
|---|---|---|
| **மாத்தறை**<br><br>நுககஹவத்த கொட்டவில, கம்புறுகமுவ களத்தில் | ➢ உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அறிவுறுத்தலும் சூழலுக்கு இயைபான தொழில்நுட்ப முறைகள் பற்றிய விரிவுரை நடாத்துதலும்.<br>➢ ஆரம்பிக்கப்பட்டுள்ள அன்னாசி பயிர்ச்செய்கையினை மேலும் விரிவுபடுத்தல்<br>➢ குறைவிருத்தியுடைய பழச்செடிகளை நடுதல்<br>➢ கொடித்தோடை பயிர்ச்செய்கையை புதிதாக ஆரம்பித்தல்<br>➢ முன்மாதிரி சேதனப் பசளை உற்பத்தி செய்தல்<br>➢ பெண் விவசாய உற்பத்தியாளர் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தேசிய உணவு உற்பத்திக்கு முன்மாதிரியாக விளங்குதல்<br>➢ வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை உபகரணத்தொகுதியினை அடையாளரீதியாக வழங்குதல் | செலவு விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை |
| **ஹம்பாந்தோட்டை**<br><br>பெதிகம்தொட்ட கிராமம்,சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவு | ➢ பழச்செடிகளை பகிர்ந்தளித்தல் ( 3000 தேன்தோடைச் செடிகளும், 1000 விளாம்பழச்செடிகளும் ) | 197,500 |
| **யாழ்ப்பாணம்**<br><br>பெரியவிளான், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு | ➢ பெரியவிளன் பிரதேசத்தில் 550 பப்பாசிச் செடிகளை நடுதல் | 160,000 |
| **மன்னார்**<br><br>கட்டைகடந்தான்குளம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவு | ➢ 50 பழச்செடிகளை நடுதல் | செலவு விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை |
| **வவுனியா**<br><br>முருகனூர், வவுனியா | ➢ அரை ஏக்கர் பரப்பளவில் அன்னாசி பயிரச் செய்கை செய்தல் | 64,865 |
| **முல்லைத்தீவு**<br><br>ஒட்டுசுட்டான் பிரதேசம் | ➢ ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிலக்கடலை செடிகளை நடுதல் | 72,000 |

| | | |
|---|---|---|
| **அம்பாறை**<br><br>தமன பிரதேச செயலாளர் பிரிவின் பஹாலலந்தகராண வயல்வெளி | ➢ பஹாலலந்தகராண வயல்வெளியில் 150 ஏக்கர் பரப்பில் மூன்றாம் போகத்தின் பாசிப்பயறுச் செய்கையினை அறுவடை செய்தல்<br>➢ தமன நீர்ப்பாசன பிரிவில் RB4 கெத்எல மார்க்கத்தினை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் சுத்தம் செய்தல்<br>➢ கல்லோயா நவோத்யா கருத்திட்டத்தின் கீழ் நீர்ப்பம்பிகளை வழங்குதல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய காப்புறுதி நட்டஈட்டுத் தொகைக்கான காசோலைகளை வழங்குதல் | 66,030 |
| **திருகோணமலை**<br><br>மணிராசன் குளம், கிண்ணியா | ➢ முன்மாதிரி பயிர்ச்செய்கையாக சோளமும் நிலக்கடலையும் நடுகை செய்தல்<br>➢ தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு சோள விதைகள், 10 கோழிக்குஞ்சுகள் மற்றும் பசுக்களுக்கான உணவும் பழச்செடிகளும் வழங்குதல்<br>➢ பழச்செடிகளை நிலத்தில் நடுதல் | 106,800 |
| **மட்டக்களப்பு**<br><br>அரச விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம். கரடியனாறு, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவு | ➢ நெல், சோளம், நிலக்கடலை, கௌப்பீ, உழுந்து, பாசிப்பயறு, எள்ளு, சோயா , பெரிய வெங்காயம், குரக்கன், மிளகாய், மரக்கறி மற்றும் பழங்கள் போன்ற பயிர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் | செலவு விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை |
| **குருணாகல்**<br><br>பலகொல்லாகம நிக்கவரெட்டிய பிரதேச செயலாளர் பிரிவு | ➢ பெரும்போகத்தினை ஆரம்பிப்பதற்கான சிரமதானம்<br>➢ உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தல் | 180,000 |
| **புத்தளம்**<br><br>துலாவல கிராமம் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு | ➢ துலாவல கிராமத்தில் வெட்டுமரங்கள் மற்றும் ஏனைய உணவு பயிர்ச்செய்கைக்கான நிகழ்ச்சித்திட்டம்<br>➢ தேர்ந்தெடுக்கப்பட்ட இடமொன்றில்சூழலலுக்கு இயைபான வீட்டுத்தோட்டமொன்றை அமைத்தல் | 116,340 |

| | | |
|---|---|---|
| **அநுராதபுரம்**<br>பாவற்குள கிராமம், நாச்சாதுவ பிரதேச செயலாளர் பிரிவு | ➢ பரசூட் நெல்லுற்பத்தி முறைபற்றி விவசாயிகளை அறிவுறுத்தல்.<br>➢ பிரதேச செயலாளர் பிரதேசத்துக்குட்பட்ட பொது இடங்களில் ஒட்டுப் பழச்செடிகளை நடுதல், முன்மாதிரி வீட்டுத்தோட்டம் தாபித்தல்.<br>➢ சேதனப்பசளைப் பாவனையை ஊக்குவித்தல். | 290,000 |
| **பொலன்னறுவை**<br>மாவட்ட விவசாய பயிற்சி மத்திய நிலையம், பொலன்னறுவை | ➢ விதைப் பண்ணையில் அமைந்துள்ள குளத்திற்கு 30,000 மீன்குஞ்சுகளை விடுவித்தல்<br>➢ அரசியல் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளின் பங்களிப்புடன் சந்திப்பொன்றை நிகழ்த்துதல்<br>➢ விவசாய சேவை வழங்கல்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கண்காட்சியினையும் பயிற்சிப்பட்டறையினையும் அங்குரார்ப்பணம் செய்தல் | 160,000 |
| **பதுளை**<br>பலாவத்த வயற் பரப்பு,கோமாரிக்கா கால்வாய் திட்டம் - மீகஹகீவுல | ➢ உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாகபல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 129,500 |
| **மொனராகலை**<br>வெல்லவாய மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவுகள் | ➢ இனிப்புப் பானங்களுக்கு மாற்றீடாக மாவட்டம் முழுவதிலும் இளநீர் கன்றுகளை நடுதல்<br>➢ சியம்பலாண்டுவ - இயந்திர உதவியுடன் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சோள விதைகளை நடுதல்<br>➢ நெற்பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதைநெல் வழங்குதல்<br>➢ வெல்லவாய – 1 ஏக்கர் பரப்பில் நிலக்கடலை நடுதல்<br>➢ இலங்கை கைத்தொழிற்சங்க சமூகத்தின் கீழ் நிலக்கடலை உற்பத்தியாளர்களின் பிரதேச சங்கத்தினை அமைத்தல் | 56,000 |

| | | |
|---|---|---|
| **இரத்தினபுரி**<br><br>மாவட்ட செயலகம், இரத்தினபுரி | ➢ வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைக்காக பட்டானா விதை மற்றும் நடுகைப்பொருட்களை மத்திய நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பின்வரும் மரக்கறி விதைகள் உள்ளிட்ட சிறு பொதிகளை விவசாயிகளுக்கு வழங்குதல். வழங்கப்பட்ட மொத்த விதைகளின் அளவு : வெண்டிக்காய் விதை 500 கிராம், புடலங்காய் விதை 600 கிராம், பயிற்றங்காய் விதை 1335 கி, குடமிளகாய் விதை 300 கி, முள்ளங்கி விதை 250 கி, போஞ்சி விதை 730 கி, சிறகவரை விதை 490 கி, பீக்கங்காய் விதை 10 கி, | 81,071 |
| **கேகாலை**<br><br>தெதிகம வயல் வெளி, வரக்காபொல பிரதேச செயலாளர் பிரிவு | ➢ ஏர்பூட்டு விழாவினை நடாத்தி 3 வரவைகளை உழவுதல்.<br>➢ பழச்செடிகள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குதல் | 64,000 |

**மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் - 2015.10.05**

**மாத்தளை**





**யாழ்ப்பாணம்**







**முல்லைத்தீவு**





| | |
|---|---|
| 2015.11.09 | அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் அரசியல் தலைமைத்துவம் மற்றும் பங்களிப்புச்செய்யும் நிறுவனங்களுடன் உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அறிவுறுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்கான விசேட கலந்துரையாடலொன்று சனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. |





| | |
|---|---|
| 2015.11.13 | கமத்தொழில் வியாபார அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டமானது (NADEP) சனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவிற்கு கையகப்படுத்தப்பட்டது. |
| 2015.11.25 | நச்சுத்தன்மையற்ற நீடித்து நிலைக்கும் விவசாயத்தினை மேம்படுத்தலுக்காக 2015 ஆம் ஆண்டின் பெரும் போகத்தின் போதே பாரம்பரிய தேசிய விதைநெல் பெற்றுக்கொள்வதற்காக1 கி.கிராம் 70/-ரூபாப்படி கொள்வனவுசெய்து அவ்விதைகளை உரிய விவசாயிகளுக்கு இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கும் பருவமல்லாத காலத்தில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கும், தேவையான விதை,நடுகைப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை உரிய விவசாய அமைப்புக்களுக்கு இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்குமாக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக (அமைச்சரவை பத்திர இல: 15/1331/701/008) அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு 02.12.2015 ஆம் திகதிய அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 2015.12.09 | நச்சுத்தன்மைற்ற விவசாயத்தினை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் 2015/2016 பெரும்போகத்தில் பாரம்பரிய நெல் வகைகள் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக 10 மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. |

**2015/2016 பெரும்போகத்தில் பாரம்பரிய விதைநெல் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்ட மொத்த செலவினம்**

| மாவட்டம் | செலவிடப்பட்ட தொகை (ரூ) |
|---|---|
| திருகோணமலை | 4,397,400 |
| அம்பாறை | 191,940 |
| முல்லைத்தீவு | 3,700,000 |
| வவுனியா | 1,704,570 |
| பொலன்னறுவை | 119,700 |
| அனுராதபுரம் | 8,050,595 |
| புத்தளம் | 1,373,435 |
| குருணாகல | 2,105,120 |
| கிளிநொச்சி | 702,300 |
| **மொத்தம்** | **22,345,060** |

**தேசிய விதைநெல் உற்பத்தி**

தேசிய பாரம்பரிய நெல் உற்பத்தியினை பிரபல்யம் செய்யும் கருத்திட்டத்தின் கீழ் 8 மாவட்டங்களில் 2015 ஆண்டின் திசெம்பர் மாதமளவில் பயிர்ச்செய்யப்பட்டுள்ள பூமியின் அளவு 9065 ஏக்கராவதுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட தேசிய விதைநெல்லின் அளவு 272,428 கிலோ கிராமாகும்.

| மாவட்டங்கள் | பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் அளவு (ஏக்கர்) | தேசிய விதைநெல் வழங்கப்பட்ட அளவு (கி.கிராம்) |
|---|---:|---:|
| திருகோணமலை | 2094.000 | 62,820 |
| அம்பாறை | 376.500 | 11,295 |
| முல்லைத்தீவு | 1050.300 | 31,509 |
| வவுனியா | 795.750 | 24,351 |
| பொலன்நறுவை | 444.375 | 13,331 |
| அநுராதபுரம் | 2649.100 | 79,473 |
| புத்தளம் | 650.500 | 19,515 |
| குருநாகல் | 1004.490 | 30,134 |
| **மொத்தம்** | **9065.015** | **272,428** |

**2015.12.21-** உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாகச் சிறந்த விவசாயியைத் தெரிவு செய்வதற்கான எடுகோள்களை தீர்மானிப்பதற்குரிய கலந்துரையாடலை மேற்கொள்வதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

**சுற்றாடல் பாதுகாப்புத் தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

**பின்னணி**

சனத்தொகை வளர்ச்சி, முறையற்ற நகரமயமாக்கல் மற்றும் அபிவிருத்தி, மக்களுடைய வாழ்க்கை முறை மாற்றமடைவதன் காரணமாக அண்மைக்காலம் முதல் குப்பைகூழங்களை குப்பைகள் முறையற்ற விதத்தில் வெளியேற்றுதல், சூழல் மாசடைதல்,காடுகளை வெட்டுதல், மண் சரிவுகள் போன்ற பல சுற்றாடல் பிரச்சினைகள் வேகமாக அதிகரித்து தற்போது அது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளும் உள்ளடங்கிய சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்துப் பங்குதார நிறுவனங்களுடனும் இணைந்து பிரதான மூலோபாய வழிவகைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான மூன்று வருட தேசிய நிகழ்ச்சித் திட்டம் (2016-2018) ‘‘புனரோதயம்’’ என்ற தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டமானது 2015 ஒத்தோம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டிய கொள்கை ரீதியிலான உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் (அமைச்சரப்பத்திர இலக்கம் - 15/1390/701/007) இற்காக 2015.10.14 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது உடன்பாடு எட்டப்பட்டது / முடிவு எடுக்கப்பட்டது.

“புனரோதயம்” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள முக்கிய இலக்குகள்.

- இலங்கையில் நிலையான தன்மையினை தொடர்வதற்குத் தேவையான மொத்த நிலப்பகுதியில் 32% அளவினை அதிகரிப்பதுடன் வனவளப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியினை மேற்கொள்ளுதல் (“வனரோப” மற்றும் வனசரண” நிகழ்ச்சித்திட்டங்கள்)

- நிலைபேறான கழிவு முகாமைத்துவத்தின் மூலமாக 2018 ஆம் ஆண்டளவில் தூய்மையான வாழ்வுச் சுற்றாடலொன்றை உருவாக்குதல் (“நிகச லங்கா”,“நிகசல புரவர” மற்றும் “சுனில் சயுர” நிகழ்ச்சித்திட்டங்கள்)

- இலங்கையிலுள்ள இயற்கை வளங்களை நிலைபேறாகப் பயன்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தின் மூலமாக வாழ்வுக்குப் பிரியமான சுற்றாடல் தொகுதி யொன்றினை உருவாக்குதல். (மண்சரிவும் அதனைத் தடுத்தலும்,“பசுந்தரை”,அகழ்வு நிலத்தினைப் புனரமைப்புச் செய்தல்”,“காலநிலைக்கு பழக்கப்படும் நிலைபேறான கிராமங்கள், மகிழ்வூட்டும் நகரங்கள் மற்றும் மகிழ்வூட்டும் கிராமங்கள் மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கின்ற நீர்ப் பாதுகாப்பு, செழிப்பு நகரங்கள் மற்றும் மக்கள்மற்றும் நீர்சார்ந்த பாதுகாப்பு, செழிப்புநிலங்கள்சார்ந்த மற்றும் ஜனரஞ்சகமான நிகழ்ச்சித்திட்டங்கள்)

- சுற்றாடல் பாதுகாப்புப்பற்றி மக்களை வெளிப்படையாகவலுவூட்டுதல் (மக்களின் கோசம் எழுப்பும் நிகழ்ச்சிதிட்டம்)

- சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் முகாமைத்துவத்திற்கு பிரபல்ய நிறுவனத் தொகுதியினை உருவாக்குதல் மற்றும் ஒன்றிணைந்த சுற்றாடல் முன்னேற்றத்தினை கட்டியெழுப்புதல்” (“தொகுதிபுனர்நிர்மாணம்” நிகழ்ச்சித்திட்டம்)

- இந் நிகழ்ச்சித்திட்டத்தினை வழிநடத்துதல், மேற்பார்வை, முன்னேற்ற மீளாய்வினை சனாதிபதி செயலாளர் உட்பட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உரிய நிறுவனங்களின் தலைவர்களின் குழுவின் மூலமாக மேற்கொள்ளுதல், அதேபோன்று மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களிலே அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களிலே அலுவலர்களினதும் மற்றும் ஏனைய தரப்பினர்களையும் கொண்டதான குழுக்களின் மூலமாக மேற்குறித்த தேசிய மட்டத்திலான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துதல்.

**2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்**

2015.07.21 அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் சனாதிபதி செயலகத்தில் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஆரம்பக் கூட்டம் இடம்பெற்றமை.

2015.07.30 மூன்று வருட தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பான நிகழ்ச்சிதிட்டத்தினை சனாதிபதி அலுவலகத்தின் பெருவிருந்து மண்டபத்தில் நடாத்துதல்.

2015.09.19 சர்வதேச கரையோர சுத்திகரிப்பு செய்யும் தினம் காலிமுகத் திடலிலே அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் மேற்கொள்ளுதல்









2015.09.21 –“புனரோதயம்” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம் (2016-2018) க்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பித்தல்

2015.10.11 “வனரோபா” தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் நவதெவிட்ட, மகாவலி வனப்பகுதியில் நடாத்தியமை











- 2015.10.13 -ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பசுமை காலநிலை நிதியம் தொடர்பிலான கலந்துரையாடல் சனாதிபதி செயலகத்தில் நடாத்தப்பட்டமை

- 2015.10.14-இலங்கையினுள் அஸ்பெஸ்ரஸ் சீற் உற்பத்தியினையும் மற்றும் பயன்பாட்டினையும் தடை செய்தல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான நிகழ்ச்சிதிட்டத்தின்போது கலந்துரையாடப்படுதல்.

- 2015.11.17 -கொழும்பிலும் அனைத்து பிரதான நகரங்களிலும் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்தல் மற்றும் அழித்தல்பற்றிய கருத்திட்ட முன்மொழிவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அபிவிருத்தி மற்றும் விசேட அபிவிருத்தி பிரிவில் நடாத்தியமை

- 2015.11.19-Higher Level Ministerial Committee on preparation of a project proposal for the Green Climate Fund கூட்டமானது சனாதிபதி செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் சனாதிபதி அலுவலகத்தில் நடாத்தியமை

- 2015.12.02 – 2016 சனவரி 01 ஆம் திகதி முதல் 20 மைக்கிறோனிற்குக் குறைவான பொலித்தீன் பயன்பாட்டினை தடை செய்வதற்குரிய தீர்மானத்தை எடுத்தல்.

- 2015.12.29 – அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் 2015.10.13 ஆம் திகதி பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டபடி சூழல் பாதுகாப்புத் தொடர்பான விசேட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை வழங்குதல் தொடர்பான பல்கலைக்கழக விரிவுரையாளர்களை உள்ளடக்கிய கல்விமான்களைக் கொண்ட கூட்டமொன்று நடாத்தியமை.







**போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

**பின்னணி**

போதைப்பொருள் பயன்பாடானது அண்மைய சில தசாப்தங்களாக எமது நாடு முகங்கொடுத்துள்ள பாரியதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இலங்கையில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 1/3 பகுதி வருமானமானது மதுசாரம் மற்றும் புகைத்தலுக்காக செலவு செய்யப்படுவதாகவும், சுகாதாரத்துறையின் செலவில் 22 வீதத்திற்குக் கூடுதலானவை நேரடியாக மதுசாரம், புகைத்தல் பயன்பாட்டிற்குள்ளான நோயாளர்களுக்காகவேண்டி செலவு செய்யப்படுவதாகவும், ஆய்வுமூலமாகத் தெரிய வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக போதைப்பொருள் பயன்பாட்டாளர்களின் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களும் பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இத்துரதிஷ்டவசமான நிலையில் இருந்து நாட்டினை மீட்டுக்கொள்வதற்காகவேண்டி "போதையிலிருந்து விடுபட்ட நாடு" வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

போதைப்பொருள் கேள்வியினை குறைப்பதுடன் அதன் நிரம்பலையும் குறைப்பது தொடர்பிலான கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் கீழ்வருமாறு பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- ❖ கொள்கைகள் மற்றும் சட்டஉருவாக்கம், நடைமுறைப்படுத்துதல்
- ❖ சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல்
- ❖ தடுத்தல்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதைப்பொருள் தடுத்தல் சனாதிபதி செயலணி மூலமாகப் போதைப்பொருளைத் தடுப்பதற்கு அரச மற்றும் அரசசாரா நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்து "போதையிலிருந்து விடுபட்ட நாடு" நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்குத் தேவையான அறிவு மற்றும் மனப்பாங்குடன் கூடியவற்றை குழுக்களுக்கு வழங்குவதற்கும் அதன்மூலமாக போதைப்பொருள் பயன்பாட்டினை குறைவாகக் கொண்ட சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்காகவும் புத்திஜீவிகள் பலரின் கருத்துக்களை கவனத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களுக்காக 2015.07.08 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

**இப்போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன:**

- ❖ 2014 ஆம் ஆண்டுக்கமைவாக 2020 ஆம் ஆண்டாகும்போது இலங்கையிலே சட்டவிரோதப் போதைப்பொருட்களின் உற்பத்தி, கொண்டு செல்லல் மற்றும் விற்பனை என்பவற்றை ஆகக் குறைந்தது 80% மாகக் குறைத்தல்
- ❖ 2014 ஆம் ஆண்டுக்கமைவாக 2020 ஆம் ஆண்டாகும்போது தனிநபர் மதுசாரப் பயன்பாட்டினை ஆகக் குறைந்தது 25% ஆகக் குறைத்தல்
- ❖ 2014 ஆம் ஆண்டுக்கமைவாக 2020 ஆம் ஆண்டாகும்போது புகையிலை உற்பத்திப் பயன்பாட்டினை ஆகக் குறைந்தது 50% ஆகக் குறைத்தல்.
- ❖ புதிதாக போதைப்பொருள் பயன்பாட்டினை பயன்படுத்த ஆரம்பிப்பவர்களைத் தவிர்த்தல்
- ❖ புகையிலை மற்றும் மதுசாரத்தின்மீதான நேரடி மற்றும் மறைமுக விளம்பரத்தையும் மற்றும் அந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களை முழுமையாகத் தடை செய்தல்
- ❖ வீட்டுச் சூழலிலே, பணிபுரியும் சேவை நிலையங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் மற்றவர்களினால் போதைப்பொருள் பயன்படுத்துவதனால், பயன்படுத்தாதவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் அவ்வாறான பிரச்சினைகளற்ற சூழலிலே வாழ்வதற்கு பயன்படுத்தாதவர்களுக்கு இருக்கின்ற உரிமையினை உறுதிப்படுத்தல்
- ❖ போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய நேரடியான மற்றும் மறைமுகமான பாதிப்புகள் தொடர்பில் சரியான முறையில் மற்றும் முறையாக மக்களை விழிப்பூட்டுதல்.

**2015 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள்**

- சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத்தின நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 மே மாதம் 31 ஆம் திகதி முதல் யூன் மாதம் 06 ஆம் திகதி வரையில் புகைத்தல் தடுப்பு வாரமொன்றினை பிரகடனப்படுத்தல்.

- 2015 யூன் மாதத்தினை தேசிய போதைப்பொருள் தடுப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தல்.

- அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் PS/CP/17/2015 இன் கீழ் தேசியப் போதைப்பொருள் தடுப்புக் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு வேலைத்திட்டங்களை 2015.07.07 ஆம் திகதி வெளியிடுதல்.

- 2015.07.09 ஆம் திகதி 13 பிரதேச செயலகங்கள் உள்ளடங்கும் வகையில் போதைப்பொருள் தடுப்பு முதலாவது மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் கம்பகா மாவட்டத்திலே ஜா-எல பிரதேசத்தில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின்கீழ் நடாத்தப்பட்டது.





- 2015.07.29 ஆம் திகதி பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 19/2015 கீழ் அரச நிறுவனங்களுக்குள் போதைப்பொருள் பயன்பாட்டினை இல்லாதொழித்தல்.

- அமைச்சரவைத் தீர்மானம் 15/1658/719/038 இன் கீழ் நிதி அமைச்சின் மூலமாக 2015.11.04 ஆம் திகதி தொடக்கம் இலங்கையினுள் உற்பத்தி செய்யப்படுகின்ற / இறக்குமதி செய்யப்படுகின்ற ஏற்றுமதி செய்யப்படுகின்ற அனைத்து வகையான மதுசாரங்களுக்கும் புதிய பாதுகாப்பான லேபல் ஒன்றினை (Sticker) அறிமுகப்படுத்துதல்.

- 2015.09.18 ஆம் திகதி19 பிரதேச செயலகங்களை உள்ளடக்கும் வகையில் போதைப்பொருள் தடுப்பு இரண்டாவது மாவட்ட நிகழ்ச்சிதிட்டம் காலி மாவட்டத்திலே அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றது.





- 2015.11.16 ஆம் திகதி 11 பிரதேச செயலகங்கள் உள்ளடங்கும் வகையில் போதைப்பொருள் தடுப்பு 3 ஆவது மாவட்ட நிகழ்ச்சிதிட்டம் கேகாலை மாவட்டத்தின் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின்கீழ் இடம்பெற்றது.





**சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

**பின்னணி**

1990 தசாப்தங்களிலே இந்த நாட்டிலே பிரதானமாக ரஜரட்ட பிரதேசத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட இதன் மூலகாரணம் இனங்காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் தற்போது இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பரந்துள்ளது. இந்த நோயானது வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், வடமேல் மாகாணம், வட மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களில் கூடுதலாகப் பரந்துள்ளது. மாவட்ட அடிப்படையில் பார்க்கும் போது இந்நோயானது பிரதான 11 நகரங்களிலே (அநுராதபுரம், பொலன்நறுவை, குருநாகல், மாத்தளை, வவுனியா, பதுளை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மொனறாகலை, முல்லைத்தீவு, திருகோணமலை) 60 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு இந்நோயானது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. சுகாதார அமைச்சினால் 2015 திசெம்பர் மாதமாகும் போது அச்சுறுத்தல் பிரதேசங்களிலே வாழும் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது (Screening) அறியப்பட்டுள்ள இந்நோயாளர்களின் எண்ணிக்கை 20,828 ஆகும்.

இந்நோய்க்கான பிரதான காரணிகள் சரியான முறையிலே அடையாளம் காணப்படாதுள்ளதுடன் அனுமானிக்கக்கூடிய காரணிகளாக விவசாய இரசாயனங்கள் மற்றும் இரசாயன கழிவுகள், நீரிலே உள்ளடங்கியுள்ள பார உலோகங்கள் (ஆசனிக், கெடிமியன்,ஈயம்), போதுமானளவு குடிநீர் பருகாமை,உடல் வரட்சி மற்றும் அதிக வெப்பத்திற்கு ஆளாகுதல், நீரில் அதிக புளோரைட் அடங்குதல், நீரின் அடர்த்தி (கல்சியம், மக்னீசியம்) போன்ற விடயங்கள் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இத்தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவேண்டி அதிமேதகு சனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் 2015 ஆம் ஆண்டிலே சிறுநீரக நோய்த் தடுப்பு சனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டதுடன் ஏனைய தரப்பு நிறுவனங்களுடன் இணைந்து “சிறுநீரக நோய்த்தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்” கீழ்வரும் விடயப்பரப்புகளின்கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1. நோய் தடுப்பதற்கான நடத்தை மேம்பாடு
2. நோயாளர்களை முன்னதாகவே அடையாளம் காணுதல்
3. நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல்
4. நோயாளிகள், குடும்பம் மற்றும் மக்களுக்கான நலனோம்புகைகள்
5. சுத்தமான குடி நீரினை வழங்குதல்
6. சுகாதாரப் பாதுகாப்பான உணவு மற்றும் போசாக்கும்
7. முனைப்பான அவதானிப்பு தொகுதியொன்றினை உருவாக்குதல்
8. ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் கொள்கைகளை வகுத்தல்

**2015 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

- சுகாதாரக் கல்விப் பணியகமும் சனாதிபதி ஊடகப் பிரிவும் இணைந்து திரு.தயாரத்ன ரட்டகெதர அவர்களின் தலைமையின் கீழ் சிறுநீரக நோய் சம்பந்தமான சுவரொட்டிகள், பதாகைகள், காட்சிப் பலகைகள், வீதி நாடகங்கள் மூலமாக அப்பிரதேச மக்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- நாட்பட்ட சிறுநீரக நோயினை ஒழிக்கும் நிகழ்ச்சிதிட்டம் மற்றும் சிறுநீரக நோயினை தடுப்பதற்காகவேண்டி KIND நிதியத்திலே சிறப்புத் தூதுவர்களாக பிரபல கிரிக்கட் வீரர்களான திரு.திலகரத்ன டில்ஷான் மற்றும் திரு.முத்தையா முரளீதரன் மற்றும் EAP Holdings நிறுவனத்தின் தலைவர் திரு.மனோ தித்தவல்ல மற்றும் காலி முகத்திடல் ஹோட்டலின் தலைவர் திரு.சஞ்ஜீவ கார்டினர் அவர்களும் 2015 செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி நியமிக்கப்பட்டமை. இந்நியமனத்தின் மூலம் பிரதானமாக அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தலைமைத்துவத்தினைப் பெற்றுக் கொள்தல் மற்றும் KIND நிதியத்துக்காகவேண்டி நிதிப் பங்களிப்புச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்களின் உச்ச உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- சிறுநீரக நோய்த்தடுப்பு தேசிய நிகழ்வு 2015 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சுகாதாரப் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் மாண்புமிகு வைத்தியர் ராஜித சேனாரத்ன அவர்களின் தலைமையின்கீழ் காலி முகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்றது. சிறுநீரக நோய்த் தடுப்பு தரப்பினர்களுடைய செயற்பாடுகளை வெளியிடுதல் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்கு அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையின் கீழ் காலி முகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்றது.





**சிறப்புத் தூதுவர்களாக நியமித்தல்**



**சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்வு 2015 திசெம்பர் மாதம் 16 ஆம் திகதி காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்றமை**

- 2015.08.24 ஆம் திகதி முதல் 2015.08.28 ஆம் திகதிவரையில் முல்லைத்தீவு மாவட்டத்திலே வெலிஓய பிரதேசத்திலே நடமாடும் விசேட பரிசோதனை கிளினிக் நடாத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.
- மாளிகாவத்தை வைத்தியசாலையினை சிறிநீரகநோய் வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கு வேண்டிய கட்டிடங்களை பழுதுபார்த்தல், அலுவலகப் பணியாளர் குறைபாடு மருந்துவகைகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு உரிய தேவையினை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சீன அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசாலையொன்றினை பொலன்நறுவைப் பிரதேசத்தில் அமைப்பதற்கு 2015.08.14 ஆம் திகதி சீனத் தூதுவருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- சிறுநீரக நோயாளர்களின் மற்றும் அவர்களுடைய குடும்பத்தின் நலனோம்புகைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியாகும்போது பல்வேறு நலனோம்புகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து வைக்கப்பட்டமை. அதற்கமைவாக கொரிய அரசாங்கத்தின் உதவியின்மூலம் நோயாளர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பஸ் வண்டியொன்றினைப் பெற்றுக் கொடுத்தல், சிறுநீரக நோயாளர்களின் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக நீரோகா லொத்தரினை ஆரம்பித்து வைத்தமை, சிறுநீரக நோயாளர்களுக்காக நிதி உதவியினை வழங்குதல், சிறுநீரக நோயாளர்களுடைய பிள்ளைகளுக்கு கல்விப் புலமைப் பரிசில்களை வழங்குதல் ஆகியன பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன.







- 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி லண்டனில் வசிக்கும் இலங்கையர்களினால் சிறுநீரக நிதியம் சேகரித்தல் தொடர்பில் விசேட கருத்திட்டத்தினை திட்டமிடுதல்.

- சிறுநீரக நோயாளர்களுக்குத் தூய்மையான குடிநீரினை வழங்குவதற்காக RO Plant நீர்த்தொகுதியினை அமைத்து வெலிஓய மக்களுக்காக வழங்குதல், மெதிரிகிரிய பிரதேசத்திற்கு நீர்த்தொகுதியொன்றினை வழங்குதல். பாடசாலைகளுக்கு சுத்திகரிப்புச் செய்த நீரினை வழங்குதல். விவசாயக் கிணறுகளை வழங்குதல் மற்றும் பௌசர்கள் மூலமாக நீரினைப் பெற்றுக்கொடுத்தல் அதேபோன்று யப்பானியத் தொழில்நுட்பத்தின்கீழ் அறிமுகப்படுத்திய BIO-BRICKSநீர்ச் சுத்திகரிப்பு முறைமை பரீட்சார்த்த அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்காக வெலிஓய பிரதேச செயலகமும் மற்றும் இலங்கை இராணுவத்தினரும் இணைந்து செயலாற்றினார்கள்.







- சிறுநீரக நோய்க்கான மூலகாரணங்களை அறிந்து கொள்வதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் செயலணியின் மூலமாக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புதிய உற்பத்திகள் ஒருங்கிணைப்பு அலகு (COSTI) மற்றும் ஒன்றிணைந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒழுங்கு முறைமைப்படுத்துவதற்கு 2015 ஆண்டு இறுதிப் பகுதியிலே திட்டமிடப்பட்டுள்ளது.

# 14. மக்கள் தொடர்பாடல் பிரிவு

### அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற மக்கள் கோரிக்கைகள் (விசேடமாக அரசியல்ரீதியிலான கோரிக்கைகள்) மேற்கொள்ளுதல் தொடர்பாக மேற்குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற கோரிக்கைகளை நேரடியாக இப்பிரிவிற்கு சமர்ப்பிப்பதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் கவனத்தில் எடுத்து உரிய பிரிவுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### பொது இலக்குகள் / பணிகள்

- இந்தப் பிரிவின் முக்கியமான இலக்காவது சமர்ப்பிக்கப்படுகின்ற மக்கள் கோரிக்கைகளில் அரசியல்ரீதியான கோரிக்கைகளை பல்வேறு பிரிவுகளினதும் கவனத்திற்கு கொண்டுசென்று அதற்கான கூடுதலான கவனம் செலுத்தி உரிய தீர்வினை பெற்றுக் கொடுத்தல்.

- பிரதான கோரிக்கைகளான தொழில்வாய்ப்பு, வீட்டு வசதி, காணிகள், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுமதித்தல், மத ஸ்தாபனங்களுக்கு உதவி கோருதல், சனாதிபதி நிதியத்திலிருந்து விரைவாக நிதியினை பெற்றுக் கொள்வதற்கு விடுக்கின்ற கோரிக்கைகள், இட மாற்றங்கள், பொது வசதிகள் தொடர்பிலான செய்யப்படுகின்ற கோரிக்கைகள் என்பனவற்றை பெறுபேற்றின் அடிப்படையில் உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பித்து அதன் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### 2015 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்டவைகள்

1 மக்கள் நேயம்மிக்க சிறந்த அரச பணியினை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்க நிறுவனங்களுக்குத் தேவையான தலைமைத்துவத்தினை வழங்குவதோடு செயலாட்சி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2 மக்கள் கோரிக்கைகள், குறைகள், முறைப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளுக்கு அவசியமான தீர்வுகள், உரிய அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் தலையீடுகள் மூலமாக விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3 அடையாளம் காணப்பட்ட முக்கியமான பிரச்சினைகளின் போது நிலையான தீர்வினை வழங்கக்கூடிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஏற்பாட்டின்பொருட்டு உரிய அரச நிறுவனத்தினைச் செயலாட்சி செய்தல் மற்றும் அதன்போது தலையீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை.

4 மதத் தலைவர்கள் உட்பட மதகுருமார்கள் பொதுச் செயற்பாடுகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளமை.

5 போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பின்னர் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கோ அல்லது சனாதிபதி செயலாளர் அவர்களுக்கோ ஒப்படைப்பதற்காகக் கொண்டுவரப்படுகின்ற கோரிக்கைக் கடிதங்கள்பொறுப்பேற்றல் மற்றும் அது தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை.

6 அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் மற்றும் சனாதிபதியின் செயலாளர் அவர்களினதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை.

7 மக்கள் அழுத்தங்கள் எதிர்காலத்திலே ஏற்படக்கூடுமென கருதக்கூடிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து சனாதிபதியின் செயலாளர் அவர்களின் சிபாரிசுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

8 மக்கள் பிரச்சினைகளை குறைப்பதற்குரிய வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் சனாதிபதியின் செயலாளர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

9 2016 சனவரி மாதம் 08 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒருவருட பதவி நிறைவினையொட்டி ஆரம்பிக்கப்பட்ட ‘‘சனாதிபதியிடம் தெரிவிக்க’’ மக்கள் குறைகூறல் முகாமைத்துவ இணையத்தளத்தினை கொண்டு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

10 1919 தொலைபேசி இலக்கத்தின்மூலம், த.பெ.இல.1323 இன்கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற அனைத்து பொதுமக்களுடைய ∴ நிறுவனங்களுடைய கோரிக்கைகள், பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பினை உரிய நிறுவனத்தலைவருக்கு, மக்கள் குறைபாடுகள் முகாமைத்துவத் தரவுத்தொகுதியின் மூலமாகச் சமர்ப்பிப்பதுடன் தேவையான முன்னேற்ற மற்றும் மீளாய்வு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன்மூலம் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும் உரிய தலையீடுகள்மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற மக்கள் சேவைகள் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை உறுதிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

## 15. ஊடகப் பிரிவு

### அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் / சனாதிபதி செயலகத்தில் இடம்பெறுகின்ற விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் / விழாக்கள் தொடர்பில் ஏனைய ஊடக நிறுவனங்களுக்குச் செவ்வையான தகவல்களைப் பொறுப்புடன் வழங்குதல்.

### பொது இலக்குகள் / பணிகள்

- வீடியோ அலகின் செயற்பாடுகளை உச்சமட்ட வினைத்திறனுடன் நடாத்துதல்
- சர்வதேச ஊடகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிகளை உச்சமட்ட வினைத்திறனுடன் கொண்டு நடாத்துதல்
- ஆசிரியர் பிரிவுப் பணிகளை உச்சமட்ட வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல்
- நிழற்படப் பிரிவுப் பணிகளை உச்ச மட்ட வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல்
- புதிய ஊடகப் பிரிவின் பணிகளை உச்ச மட்ட வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல்

### 2015 ஆம் ஆண்டின் அடைவுகள் / அடைவு மட்டங்கள்

| விடயம் | மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விபரம் |
|---|---|
| 1. தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் | சனாதிபதி செயலகத்தின் மூலமாகவும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மூலமாகவும் ஏற்பாடு செய்யப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நேரடியாகவோ அல்லது பின்னர் ஒளிபரப்புச் செய்வதற்கு ஊடக ஒளிபரப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒளிபரப்புக்காக சமர்ப்பித்தல். |
| 2. விசேட கருத்திட்டங்கள் - ஆசிரியர் பிரிவு | சனாதிபதி விசேட கருத்திட்டங்கள் பிரிவின்மூலமாக வெளியிடப்படுகின்ற வெளியீட்டுத் தொகுப்புக்கான உதவிகளை வழங்குதல்<br><br>நாளாந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் மூலமாக இலங்கை தொடர்பில் பிரசாரம் செய்யப்பட்டுள்ள செய்திகள் தொடர்பில் சனாதிபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருதல் |

| | |
|---|---|
| வீடியோ பிரிவு | சிறுநீரக, போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக மக்களை அறிவூட்டுவதற்கான பிரசார படத் தயாரிப்பு செயலமர்வுகளை நடாத்திக் காட்சிப்படுத்தல்<br><br>அதிமேதகு சனாதிபதி அவர்கள் கலந்துகொள்கின்ற உத்தியோகபூர்வ விழாக்களை ஊடக உள்ளடக்க காட்சிகளை நூலகப்படுத்துவதற்காக தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கு அனுப்புதல் |
| 3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல் | உள்நாட்டு வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற செய்தி மற்றும் செய்தி அறிவித்தல்கள் மற்றும் அதுதொடர்பிலான புகைப்படங்களை அனுப்புதல் |
| 4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிவிம்பத்தினை அதிகரிக்கும் வகையில் கௌரவ சனாதிபதி அவர்களது மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலான விசேட கடிதங்கள் அல்லது வெளியீடுகளை பிரசுரம் செய்தல் | அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிவிம்பத்தினை அதிகரிக்கும் வகையில் புகைப்படங்களைத் தயாரித்தல் பிரசுரித்தல்<br><br>ஆரம்பம் முதல் இதுவரையிலும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின்போது அதிமேதகு சனாதிபதி அவர்கள் கலந்து கொண்ட சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தக்கூடிய விசேட புகைப்படப் பக்கங்களைப் பத்திரிகைகள் மற்றும் புத்தகம், சஞ்சிகைகளில் பிரசுரித்தல் |
| 5. விசேட கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல் | உள்நாட்டு /வெளிநாட்டு விழாக்கள் /கூட்டங்கள், விசேட பத்திரிகைக் கலந்துரையாடல்கள் என்பனவற்றை ஒழுங்குமுறைப்படி ஒளிபரப்புச் செய்வதற்காக சனாதிபதி ஊடகப்பிரிவு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின்போது வெளி ஊடக நிறுவனங்களை அழைத்து நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் |
| 6. காட்சிப்படுத்தல் | அதிமேதகு சனாதிபதி அவர்களின் நன்மதிப்பினை புடம்போட்டுக் காட்டும் வகையில் அனைத்துப் பக்கத் தோற்றங்களையும் உள்ளடக்கும் வகையில் நாட்டிலே இடம்பெறுகின்ற அபிவிருத்தி தொடர்பிலான காட்சிப்படுத்தல்களை நடாத்துதல் |
| 7. நாளாந்த அறிக்கையிடுதல் | நாளாந்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் மூலமாக இலங்கை தொடர்பில் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ள செய்திகள் தொடர்பில் சனாதிபதி அவர்களுக்கு அறியப்படுத்தல் |

| |
|---|
| 8. தேவையான சந்தர்ப்பங்களின்போது செயலமர்வுகள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பணியாட்தொகுதியினை ஈடுபடுத்துதல் (இலலளவு அபிவிருத்தி) |
| 9. நாளாந்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் மூலமாக இலங்கை தொடர்பில் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ள செய்திகள் தொடர்பில் சனாதிபதி அவர்களுக்கு அறியப்படுத்தல் |
| **10.** அதிமேதகு சனாதிபதி அவர்களுடைய பேச்சுக்கள் மற்றும் உரைகளுக்குத் தேவையான தரவுகளை ஒன்றுதிரட்டுதல் |

## 16. நல்லிணக்கப் பிரிவு

### அறிமுகம்

நல்லிணக்கப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது 2015 யூன் மாதம் முதல் நடைமுறைக்குவரும் வகையிலாகும். அனைத்துப் பிரசைகளுக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல், பல்வகைத்தன்மை மற்றும் தேசிய தனித்துவத்துக்கு மதிப்பளிக்கின்ற ஒற்றுமையுடன் வாழக்கூடிய நிலையானதொரு நாட்டினைக் கட்டியெழுப்புதல், அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்துக் கொண்டு தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய செயல்முறைகளுக்கமைவாக செயற்படுவதற்கு முக்கிய பங்களிப்பினை வழங்குதல் இப்பிரிவின் பிரதான பணிக்கடமையாகும். இப்பிரிவானது சனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலுக்கமைய முன்னாள் சனாதிபதி அதிமேதகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினது செயலாட்சி மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது.

### பொது இலக்குகள்/ பணிகள்

- இப்பிரிவின் பிரதான நோக்கமாவது தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்இனங்களையும் மற்றும் மதத் தலைவர்களையும், சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்புக்கள் மற்றும் தேசிய மாகாண சபைகள் மற்றும் பிரதேச அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மேற்சொன்ன பணிகளை அடைந்துகொள்வதற்கு அவசியமான வழிமுறைகளைச் செய்தல்

### 2015 ஆம் ஆண்டிலே அடைந்துகொள்ளப்பட்டவைகள்

மேற்குறித்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய நிறுவனங்கள், பல்வேறு மதங்களின் தலைவர்கள், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுடனும் அதேபோன்று வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கியநாடுகள் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கிப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இதற்காக அதிமேதகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுடைய தலைமையின்கீழ் அரசியல் கட்சிகளுடன் பலசுற்றுக் கலந்துரையாடல்கள் பல மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக தீர்மானத்திற்கு வருவதுடன் அவ் விடயங்கள் தொடர்பாக அறிக்கையொன்றினைத் தயாரித்து அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மற்றும் பிரதமர் அவர்களுக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை

- மேலும் அதிமேதகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு மாகாணங்களில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான ஏறக்குறைய 500 கடிதங்களுக்கு தாமதிக்காது பதில் அளிப்பதற்குமான உரிய நிறுவனங்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 17. போக்குவரத்துப் பிரிவு



### அறிமுகம்

சனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவுக்குள்ள பணிகள் தொடர்பில் உச்சமட்ட வினைத்திறமையுடன் செயற்படுதல்.

**பொது இலக்குகள் / பணிகள்**

- அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்களுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்
- நாளாந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
- சனாதிபதி செயலகத்திற்குரித்தான அனைத்து வாகனங்களையும் பராமரித்தல்
- சனாதிபதி செயலகத்திற்குரித்தான வாகனங்களுக்குரிய காப்புறுதி, வருமானவரிப் பத்திரம் மற்றும் புகைப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்
- வாகன விபத்துக்களுக்கான காப்புறுதி நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்
- எரிபொருள் கேள்விக்கட்டளைகளை வழங்குதல்,கொடுப்பனவுக்காக எரிபொருள் கேள்விக் கட்டளைகளைச் சரிபார்த்து கொடுப்பனவுச் சீட்டுக்களைத் தயாரித்து கணக்குப் பிரிவுக்கு முன்னிலைப்படுத்துதல்
- வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளுக்கான பற்றுச்சீட்டுக்களை பரீட்சித்து கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்தல்
- எரிபொருள் வழங்குவதற்கமைவாக பயணஓட்டப் பதிவுகளை பரீட்சித்தல் மற்றும் எரிபொருளுக்காக செலவு செய்யப்படுகின்ற ஆகுசெலவுகளை சரியான முகாமைத்துவத்தின் மூலமாக கொண்டு நடாத்துதல்
- வாகனப் பட்டியல் ஆவணங்களைக் பராமரித்தல், கையேற்றல், கையளித்தல், பதிவேடுகளிலிருந்து அகற்றுதல்
- சனாதிபதி செயலகத்திற்கு புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற புதிய சாரதிகளை வெற்றிடங்கள் நிலவுகின்ற உரிய பிரிவுகளுக்கு இணைப்புச் செய்தல்
- சாரதிகள் மற்றும் பணித்தொகுதியின் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளல்

## 01. பணித்தொகுதி

- போக்குவரத்துப் பிரிவிலே பணியாற்றிக்கொண்டிருந்த அனைத்து அலுவலர்களும் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லுதல் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் பணித்தொகுதியானது, அரச சேவையில் இணைந்து கொண்ட புதிய அலுவலர்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களிலிருந்து சனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம்பெற்று வந்துள்ள அலுவலர்களை கொண்டதாகும். அதற்கமைவாக தற்போது அலுவலகப் பணியாட்தொகுதியின் முகாமைத்துவ உதவி அலுவலர் வெற்றிடங்கள் மூன்று காணப்படுகின்றன.

- அனைத்து சாரதிகளுக்கும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திலும் மற்றும் தொழில்பயிற்சி அதிகாரசபையிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொழில்நுட்ப மற்றும் வீதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அறிவுக்கு மேலாக நேர்ச்சிந்தனை மற்றும் உளரீதியான அழுத்தத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான செயலமர்வுகளை இலங்கை மன்றக் கல்லூரிகளிலே நடாத்தியமை. இவ்வனைத்து பயிற்சி செயலமர்வுகளின் இறுதியிலே பங்குபற்றியோர் பெற்றுக்கொண்ட பின்னூட்டலானது மிகச்சிறந்ததாகும்.

- வாகனங்களின் திடீர் விபத்துக்களின்போது நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்தல் தொடர்பிலான பின்பற்றப்படவேண்டிய செயல்முறைகள் தொடர்பில் சாரதிகள் மற்றும் மேற்பார்வை பணியாட்தொகுதியினை தெளிவூட்டுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 02. சேவை வழங்கல்

தற்போது போக்குவரத்துப் பிரிவிலே காணப்படுகின்ற பௌதிக மற்றும் மனிதவளங்களைப் பயன்படுத்தி திருப்தியான சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2015.12.30 ஆம் திகதியாகும்போது சாரதி பணியாள் தொகுதியிலே 15 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்நிலைமையின் காரணமாக சாரதிகளின் வெற்றிடம் காணப்படுவதால் அவர்களுடைய விடுமுறைக் கோரிக்கையினை கட்டுப்படுத்த நேர்ந்துள்ளது.

## 03. அலுவலக நவீனமயப்படுத்தல்

அலுவலகத்தினை முறையாக அமைப்பது தொடர்பிலான கோரிக்கையினை முன்வைக்கப்பட்டதுடன், புதிய கணனி மென்பொருள் தாபிக்கப்படவுள்ளது. கணனித் தொகுதியினைச் சரியான முறையிலே செயற்படுத்துவதன் மூலம் முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், கடதாசியின் பயன்பாட்டினைக் குறைத்துக் கொள்வதும் மற்றும் நாளாந்த செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 04. வாகனப் பழுர்பார்த்தல் நடவடிக்கைகள்

வாகனப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் போது வாகனத் தொழில்நுட்ப அலுவலர்களுடைய பூர்வாங்க மேற்பார்வையின் பின்னர் ஈடுபடுத்தப்படுவதால் தேவையற்ற பழுதுபார்த்தலுக்கான கோரிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்களை மீளப்பொறுப்பேற்று களஞ்சியப்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 05. எரிபொருள் பயன்பாடு

ஏனைய வருடங்களுக்கு இணைவாக எரிபொருள் பயன்பாட்டினைத் திருப்திகரமான அளவுக்குக் குறைக்கக்கூடியதாகவுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

| வருடம் | எரிபொருள் செலவு (ரூபா) |
|---|---|
| 2014 | 350,000,000.00 |
| 2015 | 120,000,000.00 |

*(கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவிற்கு மேற்குறித்த வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கிட்டியதாக கணக்கிடப்பட்டுள்ளது.)*

## 06. வாகனங்களின் திடீர் விபத்துக்கள் மற்றும் காப்புறுதி நட்டஈடு பெற்றுக் கொள்ளும் முன்னேற்றம்

- வாகன விபத்துக்களைக் குறைத்து கடமைகளை மேற்கொள்ளுமாறு சாரதிகளை தெளிவூட்டியுள்ளதுடன், ஏற்படுகின்ற வாகன விபத்துக்களின்போது உரியவாறு காப்புறுதி நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- செயலாற்றுகை மதிப்பீட்டின்போதும் சம்பள ஏற்றங்களை வழங்கும்போதும் கவனயீனமாக வாகனஞ்செலுத்துவதை ஒரு அளவுகோலாகக் கவனத்திற்குக் கொள்வதற்கு சனாதிபதியின் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## 07. அதிபாதுகாப்பான வாகனம்

அதிபாதுகாப்பான வாகனங்களை நவீனமயப்படுத்தி சாதாரண பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதென்பதால், விற்பனை செய்வதற்கோ அல்லது தனியார் பயன்பாட்டிற்கோ பாரப்படுத்த முடியாது. அவ்வாகனத்தை அழிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைக்கமைவாக சமுத்திரச் சுற்றாடலின் சேதத்தினை குறைக்கும் வகையில் ஆழ்கடலிலே தாழ்த்தல். இது வரையில் இடம்பெற்று வந்த வழிமுறையாகும். இதற்கு மேலதிகமாக இவ்வாகனங்கள் தொடர்பில் வழங்குநர்கள் மீண்டும் இதனைக் கொள்வனவு செய்வது தொடர்பில் கேட்டறியப்பட்டுள்ளன. ஏற்றுமதி செய்யும் கப்பல் கட்டணம் மற்றும் மீள் சுழற்சிசெய்யும் செலவுகளை அரசினால் ஏற்கப்படுமானால் இவ்வாகனங்களைப் பொறுப்பேற்க முடியுமென பென்ஸ் மோட்டர் வாகன உற்பத்தி

நிறுவனம் அறிவித்துள்ளது. எனவே பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையிலோ அல்லது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ள துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துச் செல்லமுடியாத வாகனங்களை பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்குவது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**08. சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றப் பொறுப்பிலுள்ள வாகனங்களை மீளப்பெற்றுக் கொள்ளுதல்**

காணாமல் போதல், திடீர் விபத்து, முறையற்ற பாவனை மற்றும் பல்வேறு காரணங்களினால் நீதிமன்றுங்களினால் கைப்பற்றப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களுடைய சட்டரீதியான பிரச்சினைகளை தீர்த்ததன் பின்னர் மீண்டும் சேவைக்கு உட்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

**09. புதிய கொள்வனவுகள்**

அதிபாதுகாப்பு வாகனங்கள் மற்றும் விபத்துக்குள்ளாகின்ற வாகனங்களை கொண்டு செல்வதற்கு மாதாந்தம் கூடுதலான பணம் செலவாகியதால் சனாதிபதி அலுவலகத்திற்கு Car carriers 02 இனைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

10. **கணக்காய்வு விசாரணை மற்றும் அறிக்கைக்களுக்கமைய உரிய நடவடிக்கைகளை பின்பற்றுதல்**

# 18. சட்டப் பிரிவு

**அறிமுகம்**

இப்பிரிவானது 2015 மார்சச் மாதம் 18 ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன் சனாதிபதி செயலகம் மற்றும் தொடர்புடைய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் செயலாட்சி மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.


**பொது இலக்குகள்/ பணிகள்**

- அதிமேதகு சனாதிபதி அவர்களைப் பிரதிவாதியாகக் கொண்டு சமர்ப்பிக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் சனாதிபதியின் செயலாளர் அல்லது அப்பணித்தொகுதியினர் தொடர்பிலான நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தல்.
- இந்நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் உரிய சட்டச்சிக்கல்கள் தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்படுகின்ற சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக சனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பில் உரியமுறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- சனாதிபதி செயலகத்தினால் வேறு தரப்பினர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற உடன்படிக்கைகளை ஆராய்ந்து அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சுகளைச் செய்தல்
- அமைச்சரவை உபகுழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டவரைபுகள் தொடர்பில் அவதானிப்புக்களை வழங்குதல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கோவைகள் தொடர்பில் உரிய அறிக்கைகளைப் பெற்று அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்
- அமைச்சரவையினால் சனாதிபதியின் செயலாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற புதிய சட்டங்கள் ஒழுங்கு விதிகள் தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களின்போது அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்.

## 2015 இல் அடையப்பெற்றவைகள்

➢ 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வழக்கு கோவைகள் தொடர்பான சுருக்கமான அட்டவணை

| மொத்த வழக்குக் கோவைகளின் எண்ணிக்கை | 2015 ஆம்ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட வழக்குக் கோவைகளின் எண்ணிக்கை | மேலும் விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 53 | 18 | 35 |




➢ 2015 ஆம் ஆண்டிலே சனாதிபதி செயலகத்தினால் வேறு தரப்பினர்களுடன் கையொப்பமிடப்பட்ட மற்றும் கற்றாராய்ந்த உடன்படிக்கைகள் தொடர்பான சுருக்கக்குறிப்பு

- சீனத் தொழில்நுட்பக் குழுவினருக்கு வழங்கியுள்ள பேலியகொட களஞ்சியக் கட்டிடத் தொகுதியின் புதிய உடன்படிக்கை
- சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் விடுதி வசதிக்காக இலக்கம் 1, முதலிகே மாவத்தை, இலக்கம் 7. கட்டிடத்திற்கு உரியதான குத்தகை உடன்படிக்கை.
- கொழும்பு 1 சனாதிபதி மாவத்தையில் உள்ள இலக்கம் 17 உடைய கட்டிடத்திற்கான பாதுகாப்புச் சேவைக்கான உடன்படிக்கை
- கொழும்பு 1 செத்தம் வீதியில் உள்ள இலக்கம் 21 கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை

- கொழும்பு 1 சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் 06 கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை
- கொழும்பு 1 செத்தம் வீதியில் உள்ள இலக்கம் 93 கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை
- கொழும்பு 3 ஆர்.ஏ.டி. மெல் மாவத்தையில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இலக்கம் 10/சி இலக்கத்தையுடைய கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை
- கொழும்பு 1 சனாதிபதி மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் 41 கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை
- பெஜெட் வீதி சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகில துப்புரவேற்பாட்டு சேவை வழங்கல் உடன்படிக்கை
- கொழும்பு 07 லோங்டன் ஒழுங்கை 30/75ஏ கட்டிடத்திற்கு உரித்தான குத்தகை உடன்படிக்கை
- கொழும்பு 1 செத்தம் வீதியில் உள்ள இலக்கம் 61 கட்டிடத்திற்கான குத்தகை உடன்படிக்கை
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப இல. 5 ஆம் பிரிவு முதலாவது மாடிக்கான உடன்படிக்கை
- சனாதிபதி செயலாளர் மற்றும் Hayleese Agriculture Holdings Ltd நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்டுள்ள உடன்படிக்கை

➢ அதிமேதகு சனாதிபதி அவர்களை கொலை செய்வதற்கு எத்தனித்த எல்ரீ.ரீ.ஈ உறுப்பினர் சிவராஜா ஜனீவன் என்ற சிறைக்கைதியை 2015.12.25 ஆம் திகதி நத்தார் தினத்தில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



- **வாகனம் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகள்**
    - வழக்கு இலக்கம் B 20031/14 GD 7209 உடைய வாகனத்தை நீதிமன்றத்திலிருந்து விடுவித்து சனாதிபதி அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுத்தல்
    - வழக்கு இலக்கம் B 139/2015 இன் கீழ் WPKJ 0698 இலக்கமுடைய வாகனத்தினை நீதிமன்றத்திலிருந்து விடுவித்து சனாதிபதி அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுத்தல்
    - வழக்கு இலக்கம் B 9235/2015 இன் கீழ WPLD 1112 இலக்கமுடைய வாகனத்தை நீதிமன்றத்திலிருந்து விடுவித்து சனாதிபதி அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுத்தல்
    - வழக்கு இலக்கம் B 240/16 இன் கீழ KB 9980 இலக்கமுடைய வாகனத்தை நீதிமன்றத்திலிருந்து விடுவித்து சனாதிபதி அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுத்தல்
- **சனாதிபதியின் செயலாளருக்கு 2015 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்**
    - தேசியக் கணக்காய்வுச் சட்டம்
    - தகவல் அறியும் சட்டம்
    - தனி மற்றும் விகிதாசார முறைத் தேர்தல் முறையுடனான கலப்புத் தேர்தல் முறையினை அறிமுகப்படுத்தலின் மூலம் தேர்தல் முறையின் மாற்றத்திற்கான உத்தேச யாப்புத் சீர்திருத்தம்
    - பரீரா இஸ்லாமிய மகளிர் அரபுக் கல்லூரியினைக் கூட்டிணைத்தல்

# 19. வைத்தியசேவைப் பிரிவு

**அறிமுகம்**

சனாதிபதிஅலுவலகத்தினுள்பேணப்படுகின்ற வைத்தியசேவைப் பிரிவு சனாதிபதியின் செயலாளரின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருவதோடு கௌரவ சனாதிபதி அவர்களின் மற்றும் கிட்டிய உறவினர்களினதும் சனாதிபதிசெயலகத்தின் உத்தியோகத்தர்களின் சுகாதாரத்தினை சிறந்தநிலையில் பேணிச்செல்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

அதற்கு மேலதிகமாக பொருளாதாரக் கஷ்டங்களுக்குள்ளான பிரசைகளின் சுகாதார நிலைமையினை மேம்படுத்துவதற்கு தேவையான நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிடுதலும் இப்பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பொது இலக்குகள்/ பணிகள்**

- கௌரவ சனாதிபதி அவர்களின் வாகன அணியுடன் பயணிக்கின்ற நோயாளர் வண்டியினை இயங்குநிலையில் நடைமுறைப்படுத்திச் செல்வதற்குத் தேவையான செயற்பாட்டுவேலைத்திட்டமொன்றினைத் தயாரித்தல்

- பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் தொடர்பில் தொடர்ச்சியாக அதற்காகத் தலையிட்டு செயற்படுதல்

- கௌரவ சனாதிபதி அவர்களின் சுகாதார நடவடிக்கையினை இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடிப்பார்த்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவருடன் பயணித்தல்

- அலுவலகத்தின் அலுவலர்களுக்கு சிறந்த சுகாதார நிலையினை பேணிச்செல்வதற்குத் தேவையான அறிவூட்டல்களை வழங்குவதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- அலுவலக அலுவலர்களுக்கு வைத்திய சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதற்கும் சிகிச்சையினை மேற்கொள்வதற்கும் வைத்திய நிலையமொன்றை பேணிச் செல்லல்

- அலுவலகத்தின் அலுவலர்களுக்கு விசேட நிபுணத்துவர்களின் வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய பிரதான சுகாதார நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தல்

- அலுவலகத்தினால் பொது மக்களின் நலன்புரி செயற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் திட்டமிடல் மேற்கொண்டு கஷ்டப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை பண்புத்தரமாக நடாத்துவதற்கு ஆலோசனை மற்றும் செயற்பாட்டுப் பங்களிப்பினை தேவையான சந்தர்ப்பங்களின்போது வழங்குதல்

நாட்டின் தேவைக்கேற்ப காலத்திற்குக் காலம் ஏற்படக்கூடிய எந்தவொரு சுகாதார நடவடிக்கைகளுக்கும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தல்

## 20.சனாதிபதி விசாரணைப் பிரிவு

**பணி**

**அரச சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதனால் ஏற்படுகின்ற நிதி வீண் விரயத்தினைத் தடுத்தல் அரச நிறுவனங்களில் ஏற்படுகின்ற ஊழல் மோசடிகளைக் குறைத்தல்**

### அறிமுகம்

இப்பிரிவானது உள்ளக நிருவாகப் பிரிவின்கீழ் கொண்டுநடாத்தப்பட்டு வருகின்றது.

**பொது இலக்குகள்/ பணிகள்**

- அரச துறையில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முறைகேடுகளை விசாரணைசெய்து கட்டளையின்படி அதிமேதகு சனாதிபதிக்கு அல்லது சனாதிபதியின் செயலாளர் அவர்களுக்கு அறிக்கையிடுதல்

### 2015 ஆம் ஆண்டில் அடையப்பெற்றவைகள்

- 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதி தற்போதைய சனாதிபதி அவர்களின் நியமனத்தின்பின்னர் அதுவரையில் நடைமுறையில் இருந்த சனாதிபதி விசாரணைப் பிரிவின் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்ட பணிப்பாளர் நாயகம் உட்பட விசாரணை அலுவலர்கள் 12 பேரின் சேவை நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு இணைப்புச் செய்யப்பட்ட அரச அலுவலர்கள் 06 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

- மேலும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் 04 பேர் இப்பிரிவின் விசாரணை அலுவலர்களாக பணியாற்றியதோடு அவர்களின் பொறுப்பில் விசாரணைக் கோவைகள் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸ் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற அலுவலர்கள் இருவரும் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் விசாரணை உத்தியோகத்தர்களாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

- 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைக்காக முறையான அனுமதியின்படி கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டு சாட்சி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 21. சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

### அறிமுகம்

சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுகின்ற சகல மனுக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### பொது இலக்குகள் / பணிகள்

- 1904/57 ஆம் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பாரிய இலஞ்சம் மற்றும் ஊழல், அரச வளங்கள் சிறப்புரிமை அதிகாரங்களை மற்றும் அதிகாரத்தினை முறையற்றவகையில் பயன்படுத்தல் தொடர்பிலான விசாரணை

### 2015 ஆம் ஆண்டில் அடையப்பெற்றவைகள்

- 2015.03.06 ஆம் திகதி தொடக்கம் 2015.12.31 திகதி வரையில் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை 1350 ஆவதுடன் அவற்றில் ஆணைக்குழுவிற்கு 881 முன்வைக்கப்பட்டுள்ளதோடு பணிப்பாணைக்கமைய நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை 602 ஆவதுடன் வேறு நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட எண்ணிக்கை 13 ஆவதுடன் விசாரணைக்காக அனுப்பப்பட்ட எண்ணிக்கை 246 ஆகும்.